# அண்ணா வழி திராவிடம்

வாழ்வியலுக்கான அரசியல்

பாதை: 1 பயணம்: 3

வெளியீடு: அஇஅதிமுக தலைமைக் கழகம்



**அண்ணா கண்ட பெருங்கனவுப் பயணத்தில் 54வது ஆண்டு**

பக்கம் 19

**கொடியில் மட்டுமல்ல கொள்கையிலும் அண்ணா...**

பக்கம் 17

**பாரதியின் கனவை நனவாக்கிய அம்மாவின் தொட்டில் குழந்தைத் திட்டம்**

பக்கம் 21

# தலையங்கம்

## அழுகிய நெல்மணிகளும்; ஆட்சியாளர்களின் மெத்தனமும்

மக்கள் தீபாவளி கொண்டாடிக் கொண்டிருந்த போது டெல்டா விவசாயிகளுக்கு அது கண்ணீர் தீபாவளியாய் மாறியது. குறுவை சாகுபடி செய்யப்பட்ட நெல் கொள்முதல் செய்யப்படாமல் மழையில் நனைந்து டன் கணக்கில் வீணாகிக் கொண்டிருக்கிறது.


ஆனால் அதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய முதல்வரோ தீபாவளிக்கு ரிலீஸ் ஆன படத்தைப் பார்த்து சினிமா விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார். நெல்கொள்முதலில் இந்த அரசு தோல்வியடைந்த நிலையில், சாதனை என அறிக்கை விட்டுக்கொண்டிருக்கிறது ஸ்டாலின் அரசு.



## நெற்களஞ்சியமா? இல்லை, கண்ணீர்க் களஞ்சியமா?

தமிழகத்தின் காவிரி டெல்டா மாவட்டங்களில் தற்போது எழுந்துள்ள கேள்வி இதுதான். உழவர்கள் தங்கள் நெற்றி வியர்வையை நிலத்தில் சிந்தி விளைவித்த நெல்மணிகள், தொடர் மழையினால் நனைந்து, முளைத்து, அழுகி வீணாகும் துயரச் சம்பவங்கள் நாளும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

ஒருபுறம் இயற்கை; மறுபுறம் அரசின் நிர்வாகச் சீர்கேடு. இந்த இரட்டைத் தாக்குதலில் சிக்கித் தவிக்கிறார்கள் டெல்டா விவசாயிகள்.





## ஆண்டின் ஆகப்பெரிய துயரம்

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் லட்சக்கணக்கான ஏக்கரில் விளைந்த நெல், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் குவித்து வைக்கப்பட்டும், இன்னும் கொள்முதல் செய்யப்படாமல் கிடக்கின்றன. கொள்முதல் நிலையங்கள் தாமதமாகத் திறக்கப்பட்டன. நெல் மூட்டைகளை அடுக்கி வைக்கப் போதுமான இடவசதி இல்லை, சாக்கு மூட்டைகள் இல்லை, சுமை தூக்கும் தொழிலாளர்கள் பற்றாக்குறை, லாரிகள் இல்லாதது என நீளும் இந்தப் பட்டியல், அரசின் நிர்வாக அலட்சியத்தை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது.

விவசாயிகளின் கூற்றுப்படி, அரசு ஒரு நாளைக்கு 2,000 மூட்டைகளை கொள்முதல் செய்வதாக அறிவித்தாலும், உண்மையில் கொள்முதல் செய்யப்படுவது மிக மிகக் குறைவு. இதனால், கொள்முதல் நிலையங்களுக்கு வெளியே சாலையோரங்களில் குவிக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள், மழையில் நனைந்து முளைத்துவிட்டன. இந்த ஆண்டு விளைச்சல் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்த்த விவசாயிகளுக்கு, வீணான நெல்மணிகளே மிச்சம். விளைவித்த நெல்களை அரசு உரிய நேரத்தில் கொள்முதல் செய்யப்படாததால், விவசாயிகள் அடைந்துள்ள இழப்பு கற்பனை செய்ய முடியாதது. கடன் சுமை, உழைப்பு வீணானது என வேதனையில் பலர் கண்ணீர் வடிக்கும் காட்சிகள் மனதை உலுக்குகின்றன.

## சினிமா மோகத்தில் முதலமைச்சர்:

இவ்வளவு பெரிய விவசாய துயரம் டெல்டாவில் நிகழ்ந்துகொண்டிருக்க, மாநிலத்தின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்ன செய்து கொண்டிருக்கிறார்? பாதிக்கப்பட்ட விவசாயிகளைச் சந்தித்து ஆறுதல் கூறுவதோ, கள ஆய்வில் இறங்கி, கொள்முதல் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் முடுக்கி விடுவதோதான் ஒரு பொறுப்புள்ள முதல்வரின் கடமையாக இருக்க வேண்டும். ஆனால், முதலமைச்சர் ஸ்டாலினோ, இந்தப் பெரும் சோகத்தைப் பற்றி கவலைப்படாமல், தன் அமைச்சரவையுடன் சேர்ந்து 'திரைப்படங்களைப் பார்த்து' இன்புற்றுக் கொண்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் மற்றும் விவசாயச் சங்கங்கள் கடுமையாக விமர்சிக்கின்றன. விவசாயிகளின் கண்ணீருக்கு மத்தியில், அரசின் செயல்பாடுகள் அலட்சியமாகவும், ஆடம்பரமாகவும் இருப்பது டெல்டா மக்களிடையே பெரும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.



டெல்டாவின் வேதனை, ஸ்டாலின் மாடல் அரசின் தோல்வி!

## கோரிக்கை இதுவே:

"இது திராவிட மாடல் ஆட்சி" என்று முதலமைச்சர் பெருமை பேசும் இந்த வேளையில், அரசின் மெத்தனத்தால் இலட்சக்கணக்கான டன் நெல் வீணாகி, விவசாயிகள் கண்ணீரில் மிதக்கிறார்கள். எனவே, திமுக அரசு உடனடியாகத் தன் திரைப்பட மோகத்தை விட்டுவிட்டு, களத்தில் இறங்கி, வீணான நெல்லுக்கு உரிய இழப்பீட்டை உடனடியாக வழங்குதல் வேண்டும்.

கொள்முதல் விதிமுறைகளைத் தளர்த்தி தேங்கிக் கிடக்கும் நெல்லை முழுவதுமாக கொள்முதல் செய்திட போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில், டெல்டாவின் கண்ணீருக்கும், வீணான நெல்மணிகளுக்கும் ஸ்டாலினின் போலி திராவிட மாடல் அரசே முழுப்பொறுப்பு ஏற்க வேண்டும். டெல்டாவின் வேதனை, ஸ்டாலின் மாடல் அரசின் தோல்வி!

## நிர்வாகம் எங்கே போனது?

குறுவை அறுவடை முடிந்து, அடுத்த பருவமழை தொடங்குவதற்கு முன்னரே நெல் கொள்முதல் செய்யத் தேவையான முன்கூட்டிய ஏற்பாடுகள் ஏன் செய்யப்படவில்லை?

நெல் கொள்முதல் நிலையங்களில் போதிய கட்டமைப்பு வசதிகளும், மூட்டைகளை வைப்பதற்கான சேமிப்புக் கிடங்குகளும் ஏன் இன்றுவரை இல்லை?

இந்தக் கேள்விகளுக்கு திமுக அரசின் பதில்கள் வெறும் 'சமாளிப்புகளாகவே' இருக்கின்றன.



# அண்மை செய்திகள்

## நெல்கொள்முதலில் கோட்டைவிட்ட ஸ்டாலின் மாடல் அரசு

நெல்கொள்முதலில் இந்த ஸ்டாலின் மாடல் அரசு தோல்வியடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் பாடுபட்டு அறுவடை செய்த நெல்மணிகள் மழையில் நனைந்து வீணாகியுள்ளன. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி பாடுபட்ட விவசாயிகள், இந்த அரசின் பொறுப்பற்ற தனத்தால் தங்கள் உழைப்பு வீணானதால் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கின்றனர். விவசாயிகளின் துயரத்தைக் கேள்விபட்டவுடன், கடந்த அக்டோபர் 22ஆம் தேதி அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி தஞ்சாவூர் சென்றார்.

தஞ்சாவூர், திருவாரூர், நாகை ஆகிய மாவட்டங்களில், நெல் கொள்முதல் நிலையங்களில் தேங்கிக்கிடக்கும் நெல் மூட்டைகளையும், மழையில் நனைந்ததில் முளைத்த நெல் மணிகளையும் பார்வையிட்டார்.



கொள்முதல் தொடர்பாக தவறான தகவல்களைத் தந்து இந்த ஸ்டாலின் மாடல் அரசு விவசாயிகளை ஏமாற்றி வருகிறது. கொள்முதலில் இந்த அரசு தோல்வி அடைந்துவிட்டதாக எடப்பாடி கே.பழனிசாமி குற்றம் சாட்டினார். 'சாக்கு இல்லை, சணல் இல்லை, லாரி வரவில்லை, நெல் மூட்டைகளை அடுக்குவதற்கு இடம் இல்லை' என்று பல காரணங்களைச் சொல்லி இந்த அரசு விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்முதல் செய்யாமல் அலைக்கழித்து வருகின்றனர். பல இடங்களில் விவசாயிகளின் நெல் முளைத்து வீணாகியுள்ளது. கொள்முதலில் திமுக அரசு கோட்டை விட்டதால் விவசாயிகள் நிர்கதியாக நிற்கின்றனர் என கழக பொதுச்செயலாளர் குற்றம்சாட்டியுள்ளார்.

### யார் பொய் சொல்றாங்க..?

**கொந்தளித்த பெண் விவசாயி:**



தஞ்சையில் நெல்கொள்முதல் பணியை கழக பொதுச்செயலாளர் ஆய்வு மேற்கொண்ட போது, வயலில் முளைவிட்ட நெற்கதிர்களை காட்டி பெண் விவசாயி தனது வேதனையை முறையிட்டிருந்தார். அந்த தகவலுக்கு துணை முதல்வர் உதயநிதி, அந்த பெண் பொய் சொல்கிறார் என கூறினார். நெல்மணிகள் முளைத்துள்ளதை எதிர்க்கட்சி தலைவரிடம் காட்டிய பெண் விவசாயி (பூங்கொடி), குத்தகை சாகுபடி செய்து வருபவர் என்றும், அவர் இன்னும் அறுவடை பணியையே மேற்கொள்ளாதபோது, அவர் எப்படி நெல் மூட்டைகளை கொள்முதல் நிலையத்துக்கு கொண்டு வந்தார் என்பது அவருக்குத்தான் வெளிச்சம் என உதயநிதி தெரிவித்திருந்தார். அதற்கு மறுப்பு தெரிவிக்கும் விதமாக பெண் விவசாயி பூங்கொடி, 'நான் 5 ஏக்கரில் குத்தகை சாகுபடி செய்து வருகிறேன். தற்போது அறுவடை செய்யும் தருவாயில் உள்ள குறுவை நெற்கதிர்கள், அண்மையில் பெய்த மழையில் நனைந்து வயலிலேயே சாய்ந்து முளைவிடத் தொடங்கியுள்ளன. அதைத்தான் எதிர்க்கட்சி தலைவரிடம் காண்பித்தேன். ரூ.1.5 லட்சம் செலவு செய்து சாகுபடி செய்தேன். தற்போது அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அறுவடையை முடித்து, அதில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு, மழையில் ஒழுகும் கூரை வீட்டை சரி செய்ய வேண்டும் என்று கருதியிருந்தேன். ஆனால், மழையில் நனைந்து நெல்மணிகள் முளைத்துள்ளதால், வேதனையாக உள்ளது' என தெரிவித்தார்.

## முழுநேர சினிமா விமர்சகரான முதல்வர்

தான் எதற்கு முதல்வர் ஆனோம்? என்பதையே மறந்துவிட்டு, முழுநேர சினிமா விமர்சகராக மாறிவிட்டார் இன்றைய முதல்வர் ஸ்டாலின் என கழக பொதுச்செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி விமர்சித்து உள்ளார். விவசாயிகள், மக்களின் கண்ணீரை உணராத இந்த குடும்ப மன்னராட்சியாளர்களுக்கு, மக்களாட்சியின் சக்தியை மக்கள் உணர்த்தப் போகும் நாள் வெகு தொலைவில் இல்லை! என கழக பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் இந்த நான்கரை ஆண்டுகளில் 28க்கும் மேற்பட்ட லாக்கப் மரணங்கள் நடந்துள்ளன. ஆனால் அது குறித்து முதல்வருக்கு ஒரு கவலையும் இல்லை. எந்தவித நடவடிக்கையும் இல்லை. அவர் ஜெய்பீம் படத்தை பார்த்து நெகிழ்ந்தேன் என சமூக வலைதளத்தில் பதிவிட்டிருந்தார்.

பணி நிரந்தரம், கூலி உயர்வு ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஆகஸ்ட் மாதம் தூய்மைப்பணியாளர்கள் போராடினார்கள். அவர்களை குண்டுக்கட்டாகத் தூக்கிப் போய் இரவோடு இரவாக கைது செய்ய சொல்லிவிட்டு, முதல்வர் குடும்பத்துடன் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த கூலி படத்தை பார்த்துக்கொண்டிருந்தார்.



இந்த அக்டோபர் மாதம் 01 முதல் 25 ஆம் தேதி வரைக்கும் பருவமழையால் 31 பேர் உயிரிழந்துள்ளனர். மழை மற்றும் புயல் காலத்தில் மக்களை பாதுகாப்பதற்கான எந்தவித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் ஆலோசிக்க ஸ்டாலின் மாடல் அரசுக்கு நேரம் இல்லை. பருவமழை தொடங்கியுள்ள நிலையில் அறுவடை செய்த நெல் மழையில் நனைந்து வீணாகி வருவதைக் கண்டு விவசாயிகள் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கின்றனர். தஞ்சையில் ரோடுஷோ போகத் தெரிந்த முதல்வருக்கு, விவசாயிகளை நேரில் போய் பார்க்க நேரமும் இல்லை, மனமும் இல்லை. விவசாயிகள் இந்தத் தீபாவளியை கண்ணீரோடு கொண்டாடிக் கொண்டியபோது போது, ஸ்டாலின் தீபாவளிக்கு ரிலீஸான பைசன் படத்தை பார்த்து விட்டு விமர்சனம் சொல்லிக் கொண்டு இருந்தார்.

## SIR-ஐக் கண்டு அஞ்சும் திமுக

தாங்கள் இத்தனை நாள் நம்பி வந்த போலி வாக்குகள் எல்லாம் போய்விடுமே என்ற பயத்தில் வாக்காளர் பட்டியல் சீர் திருத்தத்தைக் கண்டு திமுக பயப்படுகிறது. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டில், வாக்காளர் பட்டியலை சீராக வைத்திருக்க வேண்டியது தேர்தல் ஆணையத்தின் கடமை. அதன்படி இரட்டை வாக்குகள், இறந்தவர் பெயர் நீக்கம், புதிய வாக்காளர் பெயர் சேர்த்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள சுருக்க மற்றும் தீவிரத் திருத்தங்களை (Special and Intensive Revision) தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

"சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தத்தை" (S.I.R.) தேர்தல் ஆணையம் மேற்கொள்வதை எந்தவொரு ஜனநாயகப் பூர்வமான அரசியல் கட்சியும் ஆதரிக்கும். ஆனால் திமுக-வோ, இதை எதிர்ப்பதோடு அல்லாமல், ஏதோ தமிழ்நாட்டில் உள்ள யாரும் வாக்கே செலுத்த முடியாது என்பது போன்ற தனது வழக்கமான உருட்டுக்கடை அல்வாவை விற்க ஆரம்பித்துள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்கள் போட்டியிட்ட ஆர்.கே.நகர் தொகுதியில் 27,779 போலி வாக்குகள் இருந்தது முதல், இராயபுரம் தொகுதியில் கள்ள வாக்கு செலுத்த முயன்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் அவர்களிடம் சிக்கிக்கொண்ட திமுக கொத்தடிமை வரை எத்தனையோ உதாரணங்கள், இந்த S.I.R. நடத்துவதற்கான தேவையை வலியுறுத்துகின்றன.

திமுக-வின் மிக முக்கியமான தேர்தல் ஆயுதமான போலி வாக்குகள் தங்கள் கையை விட்டுப் போகிறதே என்ற பதற்றத்தில், பயத்தில் திமுக இப்போது அழுது, புலம்பி, கதறிக் கொண்டிருக்கின்றது. அண்ணா பல்கலைக் கழகம் முதல் தேர்தல் ஆணையம் வரை SIR என்றாலே திமுக-விற்கு ஒருவிதமான பயம் வரத்தான் செய்கிறது!

# சோதனைகளை சாதனைகளாக மாற்றிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்

- அருண் ஜெயபிரகாஷ்

## சோதனைகளை சாதனைகளாக மாற்றிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்

தமிழ்நாடு இன்று வரை தமிழ்நாடாக இருக்கக் காரணம் பெரியாரின் திராவிட கொள்கையும், அறிஞர் அண்ணாவின் திராவிட சிந்தனையும் மற்றும் தொலைநோக்கு பார்வையும் தான். இதன் காரணமாகத் தான் இன்று வரை தமிழ்நாடு திராவிட மண்ணாக விளங்குகிறது. அத்தகைய திராவிட மண்ணை மண்ணோடு மண்ணாக்க முயன்ற கட்சி தான் திமுக மற்றும் கருணாநிதி. அறிஞர் அண்ணா மறைந்த பின், போலி திராவிடத்தை பின்பற்றி கொடுங்கோல் ஆட்சி செய்த கருணாநிதி, திராவிட கொள்கையை மறந்து, மறைத்து தன் குடும்ப வளர்ச்சிக்காக செயல்பட ஆரம்பித்தார். அறிஞர் அண்ணாவின் படைத்தலைவரான புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஒரு போதும் இத்தகைய செயலுக்கு இடம் கொடுக்காமல் தொடர்ந்து ஊழலுக்கு



எதிராக கருணாநிதிக்கு அழுத்தம் கொடுத்து வந்தார். அறிஞர் அண்ணாவின் காலத்திலேயே ஊழல் செய்த கருணாநிதிக்கும் , புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆருக்கும் முரண்பாடு தொடங்கிவிட்டது. 1971 ஆம் ஆண்டு இருவரும் தேர்தலில் இணைந்து செயல்பட்டாலும், இருவருக்கும் இருக்கும் பூசலை அவ்வப்போது பத்திரிக்கைகள் பதிவு செய்து வந்தன. 1972 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் செங்கல்பட்டு திருக்கழுக்குன்றத்தில் முதன் முறையாக ஊழலுக்கு ஏதிராக, புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர் பேசினார். இதை தொடர்ந்து, சென்னையில் அண்ணா பிறந்த நாள் விழாவில், கட்சியில் ஊழல் மலிந்துவிட்டதாக திமுக மீது குற்றச்சாட்டு வைத்தார். திராவிட நாட்டை காப்பாற்றவும், மக்களை கொடுங்கோல் ஆட்சியில் இருந்து விடுவிக்கவும் அண்ணாவின் கொள்கை தான் நாட்டிற்கு மறுமலர்ச்சி என்றும் உணர்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், 1972 ஆம் ஆண்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார். பின்பு, தமிழகம் மட்டுமின்றி இந்தியா முழுவதும் அரசியல் வெப்பம் அதிகரிக்கத் தொடங்கியது. இதன் பின்னர் கருணாநிதியின் சூழ்ச்சியும், நரி தந்திரங்களையும் வெற்றிகரமாக முறியடித்து அரசியல் சாணக்கியரான புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் பல சோதனைகளைத் தாண்டி சாதனைகளை படைத்தார். தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு பொன் அத்தியாயத்தை எழுதினார்.

## கருணாநிதியின் சூழ்ச்சியும், நரி தந்திரங்களும்

புரட்சித் தலைவர் அதிமுக கட்சி தொடங்கிய பின்பு, கருணாநிதியும் திமுகவினரும் எம்.ஜி.ஆர் மீது வெறுப்பு அரசியலை குண்டு மழை போல் பொழிய தொடங்கினர். எதற்கும் அசையாத புரட்சித் தலைவர், அண்ணாவின் திராவிட கொள்கையை கேடயமாக பயன்படுத்தி தீய சக்தி திமுகவிடமிருந்து தமிழ்நாட்டை காப்பாற்றியதை தான் வரலாறு உணர்த்துகிறது. அன்று திமுகவினர் புரட்சித் தலைவரை, கொள்கைத் தெரியாத ஊதிப் பெரிதாக்கப்பட்ட திரைப் பிம்பம் என்றும், அவரின் தமிழை தத்தக்கா பித்தக்கா என்றும் மிமிக்ரி செய்து கேலி கிண்டல் செய்தனர். எம்.ஜி.ஆர் கழுத்தில் குண்டடி பட்ட காட்சியை போஸ்டராக ஒட்டி, தேர்தலில் வெற்றிகனியை சுவைத்து, பின்னர் அதை வைத்தே தரக்குறைவாக மேடையில் பேசினர். பின்னர் தேர்தலுக்கு முன் எம்.ஜி.ஆரின் உலகம் சுற்றும் வாலிபன் படம் வெளிவருவதற்கு திமுக அரசு பல சிக்கல்களை உருவாக்கியது. தடைகளை மீறி தேர்தலுக்கு ஒன்பது நாட்களுக்கு முன் உலகம் சுற்றும் வாலிபன் வெளியாகி வெற்றிநடை போட்டது. அனைவருக்கும் மேல் ஒரு படி மேலே சென்று கருணாநிதி , எம்.ஜி.ஆர் மீது நச்சு வார்த்தைகளை பேசத் தொடங்கினார். 1977 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் அதிமுக வெற்றி பெற்று தனி பெரும்பான்மையோடு ஆட்சியமைத்து, முதன் முறையாக முதலமைச்சராக பதவியேற்றார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், பின்

இலங்கையில் பிறந்த அந்நியர் என்றும் அவர் முதலமைச்சர் பதவி வகிக்க முடியாது என்றும் வழக்கு தொடர்ந்தார் கருணாநிதி. பின்னர் நீதிமன்றத் தீர்ப்பில் இந்திய சுதந்திரத்திற்கு பிறகு இலங்கை தனி நாடாக அங்கீகரிக்கப்படவில்லை என்றும் எம்.ஜி.ஆர் அந்நியர் இல்லை, முதலமைச்சராகலாம் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அரசியல் நாகரிகம் அற்று அநாகரிகமாக பேசத் தொடங்கிய கருணாநிதி, ஒரு மலையாளி தமிழ்நாட்டை ஆள்வதா? என்று மக்களிடமிருந்து பிரிவினை ஏற்படுத்தும் வகையில் எம்.ஜி.ஆரை விமர்சித்தார். பின்னர் உடல் நலக்குறைவால் எம்.ஜி.ஆர் அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்தபோது, அதை பயன்படுத்தி கருணாநிதி, எம்.ஜி.ஆர் வந்ததும் ஆட்சியை அவரிடம் ஒப்படைத்து விடுகிறேன் என்று தந்திரமாக மக்களை ஏமாற்ற நினைத்தார். இப்படி பல சூழ்ச்சியும், நரி தந்திரங்களும் கருணாநிதி செய்திருக்கிறார் என்பதுதான் புதைக்கப்பட்ட வரலாறு.

## பொன்மனச் செம்மல்
## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்

கொடுத்து கொடுத்து சிவந்த கரம் கொண்டவர் என்று இன்றுவரை அவருக்கு தனிச்சிறப்பு உண்டு. தமிழ்நாட்டு மக்கள் அனைத்திற்கும் மேலாக எம்.ஜி.ஆர் என்ற மூன்றெழுத்தை பெருமளவில் நேசித்தனர். இன்றும் பெரியவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், இன்னும் சாகவில்லை அவருடைய வாட்ச் இன்றும் ஓடிக்கொண்டிருக்கிறது என அவர்கள் கூறுவதை நாம் கேட்டிருப்போம்.



இன்று யார் புதிய கட்சி தொடங்கினாலும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ஆட்சியை வழங்குவேன் என்பதுதான் அவர்களின் முதல் முத்தான வார்த்தை. எம்.ஜி.ஆர் ஆட்சி தருவேன்' என்றார் ரஜினிகாந்த், 'எம்.ஜி.ஆரின் நீட்சி நான்' என்றார் கமல்ஹாசன். விஜயகாந்த் கூட தன்னை கருப்பு எம்.ஜி.ஆர் என்றுதான் சொல்லிக் கொண்டார். பாக்கியராஜ், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் வாரிசு என்று தன்னை சொல்லிக்கொண்டார். நடிகர் விஜய் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரை போல் ஏழைகளுக்காக உழைப்பேன் என்றார்.

டி.ராஜேந்தர் கூட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஆட்சியை போல் என்னாலும் ஆள முடியும் என்று சொல்லி இருக்கிறார்.

**அன்று தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு எம்.ஜி.ஆர் செயல்படுத்திய நலத்திட்டங்களே இதற்குக் காரணம்.**



# சாதனை படைத்த எம்.ஜி.ஆர்



- எம்.ஜி.ஆர் Pre University Course-ஐ மாற்றி 10, +2 பாடத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். பியூசி பாடதிட்டத்தை நடத்திவந்த 170 கல்லூரிகளின் நிலை மாறி அதிகப்படியான மாணவர்கள் 10, +2வில் சேர்ந்தார்கள். தமிழகத்தில் பட்டதாரிகள் அதிகரித்ததற்கு இதுவே முக்கியக் காரணம்.



- புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில் 10 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள் இருந்தன. 25 இலட்சம் டெபாசிட், 25 ஏக்கர் நிலம் மற்றும் 50 சதவீத இடங்கள் அரசிற்கு என்ற அடிப்படையில் தனியார் பொறியியல் கல்லூரிகள் அமைக்கும் முயற்சியை எம்.ஜி.ஆர் முன்னெடுத்தார். தமிழகத்தில் ஐ.டி பலமாக காலூன்றுவதற்கு இதுவே ஒரு முக்கிய காரணமாக இருந்தது.



- திருச்சியில் 1 ஜூலை 1980 ஆம் ஆண்டு அன்று சத்துணவு திட்டத்தை தொடங்கி வைத்தார். மாணவர்களோடு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் மதிய உணவை சாப்பிட்டார். இதனால் 56.9 லட்சம் கிராமப்புற மாணவர்கள் பயன் பெற்றனர். செப்டம்பர் 1982-ல் நகர்ப்புறத்திற்கு விரிவுபடுத்தப்பட்டு 65.7 லட்சம் மாணவர்கள் பயன் பெற்றனர்.



- +2 மதிப்பெண்கள் அடிப்படையில் கட் ஆப் முறையில் தொழிற்கல்லூரிக்கு அட்மிஷன் வழங்கியதால் ஏழை எளிய மாணவர்கள் தொழில்கல்வி பட்டதாரிகள் ஆனார்கள்.



- புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், 1982ஆம் ஆண்டு நீதியரசர் எஸ்.மகாராஜன் தலைமையில், கோயில் அர்ச்சகர் நியமனமுறை தொடர்பாக ஒரு குழுவை நியமித்தார். அந்த குழுவின் அறிக்கை, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் உரிமை வேண்டும் என்கிற கோரிக்கைக்கு ஆதரவான முக்கிய ஆவணமாக இருக்கிறது.




- ஒவ்வொரு கிராமத்திலும், குறிப்பிட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பரம்பரை பரம்பரையாக கிராம நிர்வாகத்தை கவனித்து வந்தனர். கிராம நிர்வாக அலுவலர் என்ற பதவியை உருவாக்கி அதை அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். இதன் மூலம், ஆயிரக்கணக்கான பட்டியலின மக்கள் கிராம நிர்வாக அலுவலராக வரக்கூடிய சூழல் உருவானது.

- “மூன்று படி இலட்சியம் - ஒரு படி நிச்சயம்“ என்றார் பேரறிஞர் அண்ணா. அவர் வழியில் வந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், பகுதி நேர ரேஷன் கடைகளால் எழுந்த புகாரை சீர் செய்ய அரசு சார்பில் 22,000 முழு நேர ரேஷன் கடைகளை திறந்தார். பசியால் தவித்த ஏழை மக்களின் வயிற்றில் பாலை வார்த்தார்.



- தந்தை பெரியாரும், குத்தூசி குருசாமி அவர்கள் முன்வைத்து எழுதி வந்த எழுத்து முறையை ஏற்று, தமிழ் எழுத்து சீர்திருத்தத்திற்கு சட்ட அங்கீகாரம் வழங்கி, தமிழின் இன்றைய இணைய வெளி வளர்ச்சிக்கான பங்களிப்பை செய்த மாபெரும் பெருமை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருக்கு உண்டு.



- திருக்குறளின் நெறி பரப்பிடும் வகையில் குறள் நெறி பரப்பு மையத்தை உருவாக்கினார். அதற்கு அறிஞர் திருக்குறள் முனுசாமி அவர்களை தலைவராக நியமித்து, திருவள்ளுவர் திருநாளன்று சிறந்த அறிஞர்களுக்கு திருக்குறள் விருது வழங்க ஏற்பாடு செய்தார்.



- தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் உள்ளிட்ட 6 பல்கலைக்கழகங்கள், எம்.ஜி.ஆர்., ஆட்சியில் தான் உருவாக்கப்பட்டன.



- அன்றைய ஆந்திர முதல்வர் நந்தமுரி தாரக ராமராவுடனான தனது நட்புறவை பயன்படுத்தி, தெலுங்கு-கங்கை திட்டத்தை முன்மொழிந்து, உருவாக்கி, ஆந்திராவின் கிருஷ்ணா நதியிலிருந்து தமிழகத்திற்கு தண்ணீர் கொண்டு வந்து சாதனை படைத்தார்.



- தண்ணீர் பிரச்சனையை தீர்க்க, சிறுவாணி குடிநீர் திட்டம், சாயர்புரம் குடிநீர் திட்டம் கொண்டு வந்து நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் குடிநீர் விநியோகத்தை சீர்படுத்தினார்.

- அண்ணா வழியில் மாநில சுயாட்சிக்காக குரல் கொடுத்து, மாநில அரசாங்களுக்கு சம உரிமைகள் கோரி - தென்னக மாநில முதல்வர்கள் மாநாடு நடத்தி, தென்னகத்தின் பிரகடனத்தை முழங்கினார்.



- ‘ஒரு குடிசை, ஒரு விளக்கு’ திட்டம் கொண்டுவந்து ஏழை குடிசைகளில் ஒளியேற்றினார்.

# மாநில உரிமைகளை மீட்டெடுத்த இயக்கம் அதிமுக

- நளினா

> மத்திய அரசின் வலிவு என்பது மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித்தனி வலிவையும் கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவு தான். மாநில அதிகாரங்களை எல்லாம் எடுத்து மத்திய அரசு குவித்து வைத்துக் கொள்வதால் மாநிலங்கள் பலகீனமடையும் என்பது மட்டுமல்ல, மத்திய அரசுக்கென்று புதிய வலிவு ஏதும் ஏற்பட்டுவிடாது

என்று அன்றைய காங்கிரஸ் அரசு ஆணவத்துடன் ஆதிக்கம் செலுத்திய போது, அதனிடம் வலிமை குறித்தான பாடம் நடத்தினார் பேரறிஞர் அண்ணா.

மாநிலங்களுக்கு அதிக உரிமை என்பது தான் பேரறிஞர் அண்ணாவின் கொள்கை. மாநில சுயாட்சி தத்துவத்தை செதுக்கியவர் அண்ணா. அவரது வழியில் ஆரம்பம் முதலே மாநில உரிமைகளைக் காத்து நிற்கும் தமிழகத்தின் அரணாக அதிமுக இயக்கம் இருந்து வருகிறது.

தமிழக மக்களின் துன்பங்களைப் போக்கும் வகையில், துயர்களைத் துடைக்கும் வகையில், தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக்கும் வகையில், அதிமுக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. ஆனால் கருணாநிதி காலம் முதல் திமுக அரசு, மாநில உரிமைகளை தாரைவார்த்து வந்துள்ளது. கச்சத்தீவு முதல் காவிரி வரை தமிழகத்தின் உரிமைகளை பறிகொடுத்தது திமுக. ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகளாக மாநிலத்திற்கு தேவையான நிதிகளைப் பெற, நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்காமல் இருந்த ஸ்டாலின், டாஸ்மாக் ஊழல் விசாரணை நடைபெற்ற போது வெள்ளைக் கொடி பிடித்துக்கொண்டு நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொண்டார். திமுகவுக்கு மாநில உரிமையில் எல்லாம் துளியும் அக்கறையில்லை. குடும்பநலன் மட்டுமே முக்கியம். 2ஜி வழக்கிலும், டாஸ்மாக் வழக்கிலும் தங்கள் குடும்பத்தைக் காப்பதற்காக மாநில உரிமைகளை தாரை வார்த்த இயக்கம் தான் திமுக. ஆனால் மக்கள் நலனிலும் தமிழ்நாட்டின் வளர்ச்சியிலும் துளியும் சமரசமில்லாமல் போராடி வரும் இயக்கமாக அதிமுக இருந்து வருகிறது.



*பழமை புதுமை என்ற இரு சக்திகளுக்கும் போர் நடக்கிறது. எழுத்தாளர்களின் பேனா முனைகளே அப்போரில் உபயோகமாகும் போர்க் கருவிகள்.*

## மாநில சுயாட்சிக்கு அடித்தளமிட்ட புரட்சித்தலைவர்:

மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யும் போது, அதில் சமநிலை கோரிய தமிழகத்தின் முதல் முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தான் நிதிப்பங்கீடு, கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் மாநில சுயாட்சிக்காக ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளாத தலைவராக அவர் இருந்தார். அவரது ஆட்சிக்காலத்தின் போது சத்துணவுத்திட்டம், இலவச கல்வி, மருத்துவ சேவை ஆகியவற்றை மத்திய அரசின் தலையீடு இன்றி மாநில அரசின் தீர்மானங்களாக நிறைவேற்றி, இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு அவர் முன்னோடியாக இருந்தார். மாநில சுயாட்சிக்கு தமிழ்நாட்டில் அடித்தளமிட்ட ஆட்சியாக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் ஆட்சி இருந்தது.



## சட்டப்போராட்டம் நடத்திய புரட்சித்தலைவி:

தமிழகத்தின் மாநில உரிமைகளுக்காக சட்டபூர்வமாக நீதிமன்றத்தை நாடி, வெற்றி கண்டவர் இரும்பு மங்கை புரட்சித்தலைவி ஜெயலலிதா அவர்கள். காவிரியில் தமிழர்களின் உரிமை, தமிழக மீனவர்களின் நலன், இலங்கை தமிழர் பிரச்சனை, நீட் எதிர்ப்பு என மாநில அரசின் உரிமைகளுக்காக அவர் சட்டப்போராட்டம் நடத்தினார். காவிரியில் தமிழர் உரிமைகளை நிலைநாட்டினார். முல்லை பெரியாறு அணையில் நீர்மட்டத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்தார். சமூகநீதியைக் காப்பதில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக, தமிழ்நாட்டில் 69% இடஒதுக்கீட்டைக் கொண்டு வந்தார். உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு 50% இட ஒதுக்கீட்டை கொண்டு வந்தார். கச்சத்தீவை மீட்க தொடர்ந்து போராடி வந்தார். திமுக - காங்கிரஸ் கூட்டணி அரசு நாடுமுழுவதும் மாநில உரிமைகளை பறிக்கும் வகையில் கொண்டு வர முயன்ற நீட் தேர்வு முறை, ஜி.எஸ்.டி. வரி விதிப்பு ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்து, கடுமையான சட்டப்போராட்டத்தை நிகழ்த்தினார்.

## மத்திய மாநில உறவில் சமநிலையைப் பேணிய புரட்சித்தமிழர்:

மத்திய மாநில அரசு உறவில் நடைமுறை சார்ந்த அணுகுமுறையை கடைபிடித்தவர் புரட்சித்தமிழர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள். உச்ச நீதிமன்ற உத்தரவினை அமல்படுத்தச் செய்து, காவிரி மேலாண்மை வாரியம் அமைத்து தமிழக விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்தார். டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்தார். இந்தியா முழுவதும் நீட் தேர்வு கொண்டு வரப்பட்ட போது, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாமல், தமிழகத்தில் மாநில அரசின் உரிமைகளைப் பயன்படுத்தி அரசுப்பள்ளி மாணவர்களுக்கான 7.5% இடஒதுக்கீட்டை கொண்டு வந்தார். மத்திய அரசுடன் கூட்டணியில் இருந்த போதும் நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தார். அவரது ஆட்சிக்காலத்தில் ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகளை கொண்டு வந்தார். மத்திய அரசிடம் இருந்து தமிழகத்திற்குத் தேவையான நிதியை உடனே பெறும் அளவுக்கு நடைமுறை சார்ந்த அணுகுமுறையை கடைபிடித்தார். அத்திக்கடவு அவிநாசி திட்டம் முதல் நடந்தாய் வாழி என தமிழக அரசின் திட்டங்களுக்கு நிதியை பெற வழிவகை செய்தார். கொரோனா பெருந்தொற்று காலத்தில் கூட சிறப்பாக கையாண்டார். மாநில நலனை முன்னிறுத்தி மத்திய அரசுடன் நேர்மறையான போக்கினை புரட்சித்தமிழர் கடைபிடித்தார்.

## மாநில உரிமை மீட்பின் பொற்காலம் அதிமுக ஆட்சி:

“மாநில உரிமை” என்பது வெறும் அரசியல் முழக்கமாக இல்லாமல், அது தமிழகத்தின் வாழ்வுரிமை என்பதை உணர்ந்து மாநில உரிமைகளை கட்டிக்காத்த இயக்கம் அதிமுக. திமுக அரசைப் போல விளம்பரத்தில் அல்லாமல், நிர்வாகத் திறனில் அதை வெளிப்படுத்திய இயக்கம் அதிமுக. மத்திய அரசின் அழுத்தத்திற்கும், நீதிமன்றச் சவால்களுக்கும் இடையே, தமிழகத்தின் உரிமை குரல் மங்காமல் இருப்பதற்குக் காரணம் அதிமுக உருவாக்கிய நிர்வாக மரபு தான்.

அண்ணா சொன்ன மாநில சுயாட்சி என்ற கொள்கையை ஆழமாக வேரூன்றி இருக்கும் இயக்கமாக அண்ணா வழி வந்த அதிமுக இருக்கிறது. மாநில உரிமைகளின் பாதுகாவலராக அதிமுக இயக்கம் தொடர்ந்து நீடித்து வருகிறது.







# TITAN - அதிமுகவின் தொலைநோக்குச் சிந்தனை

- ஹரிஷ் முருகன்

## தனிஷ்க் நகைகள், பாஸ்ட்ராக் கடிகாரங்கள், டைட்டன் கண் கண்ணாடிகள்...

இன்று இவை உலகளாவிய பெரிய பிராண்டுகள். ஆம். இவை எல்லாம் டைடன் நிறுவனத்தின் தயாரிப்புகள்.

டைட்டன் நிறுவனத்தின் இன்றைய பிரம்மாண்ட வளர்ச்சிக்கு புரட்சித்தலைவரின் புரட்சிகரமான, தொலைநோக்குச் சிந்தனையும், அவர் எடுத்த துணிச்சலான ஒரு முடிவும்தான் காரணம் என்றால் வியப்பாக இருக்கும். ஆனால், உண்மை அதுதான்.

1980 ஆம் ஆண்டு டாடா நிறுவனம் கை கடிகாரத் தயாரிப்பில் ஈடுபட முடிவு செய்தது. ஆனால், அவர்களுக்கு முன்பு இரண்டு முக்கியச் சவால்கள் இருந்தன.

1. அரசின் அனுமதியைப் பெறுவது
2. அதற்கான தொழில்நுட்பத்தைப் பெறுவது.

அதே காலகட்டத்தில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியின் கீழ், தமிழ்நாடு அரசு, புதிய தொழிற்சாலைகளை மாநிலத்திற்குக் கொண்டு வருவதற்காக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) மூலம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. அப்போது, கை கடிகாரங்களைத் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றை அமைப்பதற்காக, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த France Ebauches SA என்ற நிறுவனம் ஆர்வம் கொண்டிருந்தது. அந்த நிறுவனத்துடன் தொழில்நுட்பப் பரிமாற்றத்திற்காக டிட்கோ பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தது.

டாடா குழுமத்திற்கு கை கடிகாரத் தயாரிப்பில் இருந்த ஆர்வத்தை உன்னிப்பாகக் கவனித்த தமிழ்நாடு அரசு, ஏற்கெனவே பிரான்சின் முன்னணி கடிகார நிறுவனமான France Ebauches உடன் கொண்டிருந்த தொழில் உறவுகளைத் திறமையாகத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியது. இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு, மத்திய அரசிடம் பேசியது.

டாடா -வின் கூட்டாளியாக டிட்கோ செயல்படும் என்ற புதிய திட்டத்தை முன்வைத்தது. இதன் விளைவாக, மத்திய அரசின் அனுமதியும், கூடவே, France Ebauches நிறுவனத்தின் தொழில்நுட்பமும் பெறப்பட்டது.

டாடா குழுமத்தின் கிளை நிறுவனமாக டைட்டன் (TITAN) என்ற புதிய நிறுவனம் உருவாக்கப்பட்டது. Tata Industries' என்பதிலிருந்து T,I என்ற எழுத்துகளையும், 'Tamilnadu' என்பதிலிருந்து T, A, N என்ற எழுத்துகளையும் இணைத்து, TITAN என்று பெயரிடப்பட்டது. TIDCO, டைட்டன் இடையே கூட்டணி உருவானது.

1984 ஆம் ஆண்டு, குவாட்ஸ் (Quartz) கடிகாரங்களைத் தயாரிப்பதற்காக டாடா குழுமமும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும் (TIDCO) கூட்டு சேர்ந்து ஓசூரில் தொழிற்சாலையை நிறுவின. டைட்டன் கைக்கடிகாரங்கள் உருவாகி, இந்தியக் கடிகாரச் சந்தையில் புதிய சலசலப்பை ஏற்படுத்தின. டைட்டன் மிகக் குறுகிய காலத்திலேயே சந்தையில் முதலிடத்தைக் கைப்பற்றியது.

ஆக, டைட்டன் நிறுவனம் அமைய காரணமாக இருந்து, அந்த நிறுவனத்தின் திசைகாட்டியாக மாறி, அதை வெற்றிப்பாதையில் வழிநடத்தியவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.தான்.

தமிழ்நாட்டின் வளர்ச்சி சென்னையை மட்டும் மையமாக கொண்டு அமையாமல் ஓசூர், கோவை, திருநெல்வேலி போன்ற மற்ற பகுதிகளுக்கும் பரவ வேண்டும் என்பது புரட்சித் தலைவரின் தொலைநோக்குச் சிந்தனையாக இருந்தது. அந்த அடிப்படையில்தான் ஓசூரில் டைட்டன் நிறுவனம் அமைக்கப்பட்டது.

டைட்டன் நிறுவனத்தை தமிழ்நாட்டிற்கு வரும் ஒரு மூலதனமாக மட்டும் பார்க்காமல் அதன் பின்னால் இருக்கும் பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்பு இவற்றுடன் மக்களின் மேம்பாடாகவும் அப்போது பார்த்தார் புரட்சித்தலைவர்.

1984 ஆம் ஆண்டில் டைட்டன் தொடங்கப்பட்டபோது, தமிழ்நாடு அரசு, டிட்கோ (தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்) மூலம், ஓசூரில் நிலம் மற்றும் உள்கட்டமைப்புகளில் சுமார் ₹5 கோடி வரை முதலீடு செய்தது.


அதற்குப் பதிலாக, டைட்டன் நிறுவனத்தின் 25 சதவிகித பங்குகள் டிட்கோவுக்கு ஒதுக்கப்பட்டன. இதன் மூலம், டாடா குழும நிறுவனமான டைட்டனின் நிறுவனப் பங்குதாரராகத் தமிழ்நாடு ஆனது. இந்தச் சிறந்த முதலீட்டின் விளைவாக, அன்று முதலீடு செய்யப்பட்ட ₹5 கோடி இன்று ₹85,000 கோடியாக உயர்ந்துள்ளது. மேலும், TIDCO-வின் பங்கு 25% இலிருந்து 27% ஆக அதிகரித்துள்ளது.


இன்று டிட்கோ (TIDCO) நிறுவனம் பெறும் இலாபத்தில், டைட்டன் (Titan) நிறுவனத்தின் பங்கு மிகப் பெரியதாக இருக்கிறது.


தமிழ்நாடு இன்று தொழில் வளர்ச்சியில் சிறந்து, இரட்டை இலக்கப் பொருளாதாரத்தை (Double Digit Economy) எட்டியிருப்பதற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி ஜெயலலிதா மற்றும் அதே பாதையில் வந்த புரட்சித்தமிழர் எடப்பாடி கே. பழனிசாமி ஆகியோரின் தெளிவான திராவிடச் சிந்தனைதான் காரணம்.

ஆனால், இதற்கு மாறாக, இன்றைய தி.மு.க. அரசோ நவீன தாராளமயமாக்கலில் (Neo-Liberalism) ஈடுபட்டு வருகிறது. இதன் விளைவுகள்தான், பேருந்துப் போக்குவரத்து தனியார்மயம், தூய்மைப் பணியாளர்கள் தனியார் மயம் போன்ற சிக்கல்கள். இப்படியாக தமிழகம் திமுகவின் பிடியில் சிக்கி நாளுக்குநாள் தேய்மானம் அடைந்து கொண்டிருக்கிறது.

தி.மு.க.வின் நவீன தாராளமயம், வர்க்க, சாதிப் பாகுபாட்டை நீக்கும் திராவிடக் கொள்கையின்படி (திராவிடச் சிந்தனையின்படி) நடக்காமல், அதற்கு மாறாக முற்றிலும் நேர் எதிர்த்திசையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் இதற்கு ஒரு முடிவு வர வேண்டும் என்பதுதான் மக்களின் விருப்பம்.



# புரட்சித் தலைவரின் திராவிட சிந்தனையில் உதித்த சத்துணவுத் திட்டம்

**- தெய்வ பிந்தியா**

நாட்டில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் மாணவர்களுக்கு மதிய உணவை கட்டாயமாக வழங்க வேண்டும் என்று கடந்த 2001ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் தேதி உச்ச நீதிமன்றம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியது.

அந்த தீர்ப்பு, குழந்தைகளின் உரிமையை நிலைநாட்டியதோடு, அவர்கள் கல்வி பெறுவதற்கான வாய்ப்பையும் அதிகப்படுத்தியது.

ஆனால் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தை தமிழக அரசு சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பே சாத்தியப்படுத்தியிருக்கிறது என்றால், தமிழ்நாடு எவ்வளவு முன்னேறிய மாநிலமாக இருக்கமுடியும். ஆம் அதற்கு காரணம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கடந்த 1982ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் தேதி, அறிமுகப்படுத்திய சத்துணவுத் திட்டம் ஆகும்.

இத்திட்டம் இலட்சக்கணக்கான ஏழைக் குழந்தைகளின் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. அது மட்டுமின்றி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரை தமிழக வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமையாகவும் அது நிலைநிறுத்தியது.

புரட்சித் தலைவர் வெறும் அரசியல் தலைவராக மட்டும் அல்லாமல், ஏழை மக்களின் துயரங்களை தீர்த்த சமூகச் சீர்திருத்தவாதியாகவும் மக்களின் மனங்களில் இன்றும் வாழ்ந்துவருகிறார்.

1980- 1984 காலக்கட்டங்களில் வருவாய்த்துறை அமைச்சராக இருந்த எஸ்.டி.சோமசுந்தரம், "இத்திட்டம் ஒரு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த திட்டம். இனி தமிழகத்தில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும், போனாலும், இலட்சக்கணக்கான ஏழைக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் தொடங்கப்பட்ட இத்திட்டம் என்றும் நிலைத்திருக்கும்" என்று சத்துணவுத் திட்ட தொடக்க விழாவில் பேசினார்.



## மதிய உணவுத் திட்டத்தை சத்துணவுத் திட்டமாக மாற்றியமைத்த எம்.ஜி.ஆர்:

தமிழ்நாட்டில் பள்ளிக் குழந்தைகளுக்கு உணவளிக்கும் வழக்கம் 1920ஆம் ஆண்டு முதலே தொடங்கப்பட்டுவிட்டது. குறிச்சி ரங்கசாமி ஐயங்கார் இந்து இறையியல் பள்ளியில் மாணவர்களுக்கான மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கினார். அதன்பிறகு, நீதிக்கட்சியைச் சேர்ந்த சுந்தர ராவ் நாயுடு சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் அமைந்திருந்த ஒரு ஆரம்பப் பள்ளியில் காலை உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். 1925ஆம் ஆண்டுக்குள் இந்த திட்டம் மேலும் நான்கு பள்ளிகளுக்கு விரிவடைந்தது. ஆனாலும், போதிய நிதி வசதி இல்லாததால் இந்த திட்டம் பாதியிலேயே கைவிடப்பட்டது.

1956ஆம் ஆண்டு ஜூலை 17ஆம் தேதி, முன்னாள் முதல்வர் காமராஜர், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் மதிய உணவுத் திட்டத்தை மீண்டும் தொடங்கினார். 1980ஆம் ஆண்டுக்கு முன்பு வரை செயல்பாட்டில் இருந்த இந்த மதிய உணவுத் திட்டம், மாணவர்களில் மூன்றில் ஒரு பகுதியினரை மட்டுமே சென்றடைந்தது. அதுமட்டுமின்றி, ஓர் ஆண்டிற்கு 200 நாட்கள் மட்டுமே உணவு வழங்கப்பட்டது.

இதை ஓர் எடுத்துக்காட்டாக கொண்டு சத்துணவு திட்டத்தை சிறப்பான முறையில் மேம்படுத்தினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர் தொடங்கிவைத்த இந்த சத்துணவுத் திட்டமானது, முன்பிருந்ததை விட இருபத்தைந்து மடங்கு விரிவாக்கப்பட்டது. இது ஒரு வரலாற்று சிறப்பு மிக்க புரட்சி என பலராலும் பாராட்டப்பட்டது.

## சத்துணவு திட்டத்தின் முக்கிய சிறப்பம்சங்கள்:

- முன்பு குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டும் வழங்கப்பட்டு வந்த இத்திட்டம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஆட்சிக்கு வந்த பின்பு மாநிலத்தில் உள்ள அனைத்து ஏழைக் குழந்தைகளும் பயன்பெறும் வகையில் மாற்றப்பட்டது.
- விடுமுறை நாட்களைப் பொருட்படுத்தாமல், ஆண்டின் 365 நாட்களும் உணவு வழங்கப்பட்டது. இதன்மூலம், ஏழைக் குழந்தைகள் ஒரு நாள் கூடப் பசியால் வாடாமல் பார்த்துக்கொள்ளப்பட்டார்கள்.
- அங்கன்வாடி பள்ளிக் குழந்தைகளை கவனித்துக்கொள்வதற்காக குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு வரை படித்த பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். இதன் விளைவாக, குழந்தைகளுக்கு உணவுடன் சேர்ந்து முறையான பாதுகாப்பும் கிடைத்தது.

## எம்.ஜி.ஆரின் சத்துணவு திட்டம்: பசி நீக்கி, வாழ்வளித்த திட்டம்:

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள பாப்பாக்குறிச்சி கிராமத்தில், 1982ஆம் ஆண்டு ஜூலை 1ஆம் தேதி அப்போதைய முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் பள்ளி மாணவர்களுடன் அமர்ந்து, உணவருந்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு நடந்தது. அந்த நிகழ்வு சமூக நலன் மற்றும் கல்வியில் ஒரு புரட்சிகர மாற்றத்தின் ஆரம்பமாக அமைந்தது.

அந்த நாள், அனைவருக்கும் உணவு மற்றும் அனைவருக்கும் கல்வி என்ற உயர்ந்த நோக்கத்துடன், சாதி, மதம், வர்க்கம் போன்ற எந்தப் பாகுபாடும் இன்றி, அனைத்துப் பள்ளி மாணவர்களும் ஒன்றாக அமர்ந்து உணவு அருந்திய நாள். தமிழ்நாட்டின் சமூக அமைப்பையே மாற்றியமைக்கப் போகும் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் (Midday Nutritious Meal Scheme) தொடங்கப்பட்ட நாள்.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, அது ஏறத்தாழ 56.9 லட்சம் கிராமப்புறப் பள்ளி மாணவர்களைச் சென்றடைந்தது. ஒவ்வொரு குழந்தைக்கும் போதுமான அளவு ஊட்டசத்து நிறைந்த சத்தான உணவு கிடைப்பதை இது உறுதி செய்தது. பெரும்பாலான ஏழைக்குழந்தைகளுக்கு, இதுவே நாள் முழுவதும் கிடைத்த ஒரே நிறைவான சத்தான உணவு ஆகும். இதன் காரணமாக, குழந்தைகளை வீட்டு வேலைகளுக்கோ அல்லது கூலி வேலைக்கோ அனுப்பும் எண்ணத்தைத் தவிர்த்து, அவர்களைத் தவறாமல் பள்ளிக்கு அனுப்ப பெற்றோருக்கு இது ஒரு வலுவான தூண்டுகோலாக அமைந்தது.

இத்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, எம்.ஜி.ஆர். அவர்கள் 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இதனை நகர்ப்புறங்களுக்கும் விரிவுபடுத்தினார். இதன்மூலம் 31,000 பள்ளிகள் உட்பட 52,000-க்கும் மேற்பட்ட மையங்களாக விரிவடைந்து, 65.7 இலட்சம் குழந்தைகளுக்கு உணவளித்தது.

இந்த மாபெரும் செயல்பாடு குழந்தைகளின் ஊட்டச்சத்தை மேம்படுத்தியது மட்டுமல்லாமல், பெண்களுக்கு அதிகாரமளிக்கும் ஓர் ஆதாரமாகவும் மாறியது. இந்த திட்டதின் மூலம் 1,80,119 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது. அதில் 1,58,387 பேர் ஆதரவற்றப் பெண்கள்.



இந்த வேலைவாய்ப்பு அப்பெண்களுக்கு வருமானத்தையும் சுயமரியாதையையும் கொடுத்தது.

சத்துணவு திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஆண்டுக்கு 133 கோடி ரூபாய் தேவைப்பட்டது. ஆனாலும் புரட்சிதலைவர் எம்.ஜி.ஆர். தனது எண்ணத்தில் உறுதியாக நின்றார். "குழந்தைகளுக்கு உணவளித்துக் கல்வி கற்பிப்பதைவிட வேறு எந்த முதலீடும் சிறந்தது அல்ல" என்று அவர் நம்பினார்.

இத்திட்டத்தினால் 6 முதல் 11 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் பள்ளி வருகை 96.2 சதவிகிதமாகவும், 11 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் பள்ளி வருகை 66.03 சதவிகிதமாகவும் உயர்ந்தது. இதுதான் புரட்சித் தலைவர் எம்ஜிஆரின் முற்போக்குச் சிந்தனைக்கு கிடைத்த வெற்றி.

அதன்பிறகு 1983ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் தேதி, சத்துணவு திட்டத்தை மாணவர்களுக்கு மட்டும் அல்லாது, 1.5 லட்சம் முதியோர் ஓய்வூதியதாரர்கள், விதவைகள், ஆதரவற்ற குழந்தைகள் என பலதரப்பு மக்களுக்கும் நீட்டித்தார் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.

1987 காலகட்டங்களில், இந்த திட்டம் 92 லட்சம் மக்களின் பசியை போக்கி அவர்களின் வாழ்க்கையில் நம்பிக்கையை விதைத்தது.



## எம்.ஜி.ஆரின் திராவிடக் கொள்கை:
## கற்பித்தலுக்கு முன் வயிறை நிரப்புதல்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், 'கல்வி என்பது வெறும் புத்தகங்களை சுற்றியது மட்டும் அல்ல - அது பசியற்ற உடலினாலும், நிம்மதியான மனதினாலும் மலரும் மனித உரிமை' என்று தீர்க்கமாக நம்பினார்.

"ஒரு நடுத்தரக் குடும்பத்தில் தாய் தனது குழந்தைகளுக்குப் பரிமாறும் உணவைப் போல, காய்கறி வகைகளுடன் கூடிய சூடான உணவை மாணவர்களுக்கு வழங்க வேண்டும்." என்று புரட்சித்தலைவர் சொன்னபோது தலைவரின் சமூக பொறுப்பும், திராவிடத்தின் கனவும் அதில் வெளிப்பட்டது.

அவர் இத்திட்டத்தை மாணவர்களுக்கு வெறும் உணவு அளிக்கும் திட்டமாக மட்டும் புரட்சித்தலைவர் பார்க்கவில்லை, கல்விக்கான கதவு மற்றும் சமத்துவத்திற்கான பாலமாகப் பார்த்தார்.

## எம்.ஜி.ஆர். திட்டத்தின் அடுத்தகட்ட விரிவாக்கம்:

இந்த உறுதியான அடித்தளத்தில், புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தாய்மையின் பாசத்தையும், தலைமைக்கான பக்குவத்தையும் சேர்த்து, சத்துணவுத் திட்டத்தில் முட்டை சேர்க்கும் திட்டத்தை நடைமுறைபடுத்தினார். பள்ளி மாணவர்களின் உடல் வளர்ச்சிக்குத் தேவையான புரதச்சத்து அதிகரிக்க, வாரத்தில் இரண்டு முறை முட்டைகள் சேர்க்கப்பட்டன. அது குழந்தைகளின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கான அரசின் அர்ப்பணிப்பு.

அதனைத் தொடர்ந்து, புரட்சித்தமிழர் எடப்பாடி கே. பழனிசாமி தலைமையிலான அரசு, இந்த மாபெரும் திட்டத்தின் நிலைத்தன்மையையும் ஊட்டச்சத்து தரத்தையும் உறுதி செய்து, ஒவ்வொரு குழந்தைக்கும் நம்பிக்கையையும் ஊட்டச்சத்தையும் தொடர்ச்சியாக வழங்கியது.

இந்த தொடர்ச்சியான நடவடிக்கைகள், எம்.ஜி.ஆர் தொடங்கிய தொலைநோக்குக் கனவை நவீன காலத்திற்கேற்ப புதுப்பித்தன. பசியற்ற குழந்தை, கல்வியறிந்த இளைஞன், சமத்துவமிக்க சமூகமே உண்மையான திராவிடம் என்ற கொள்கையை வெளிப்படுத்தின என்பதில் துளியளவும் சந்தேகம் இல்லை.

ஆனால், இன்று அந்த மனிதநேயத்தின் பாரம்பரியம் மங்கியிருக்கிறது. திமுக ஆட்சி புரட்சித்தலைவர் உருவாக்கிய சத்துணவுத் திட்டத்தின் உயிரை குன்றச் செய்துள்ளது. 1987ஆம் ஆண்டில் 92 லட்ச மக்களின் வாழ்க்கையில் பசியை போக்கிய இத்திட்டம், இன்று (2022 -2023) வெறும் 42.14 லட்சம் மாணவர்களுக்கு மட்டுமே சென்று சேர்ந்துள்ளது. அதாவது, சரிபாதியாக குறைந்துள்ளது.

இது வெறும் எண்ணிக்கையல்ல! பசியால் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளின் கனவு. திமுக ஆட்சியில், திட்ட மையங்கள் குறைந்தன, சமூக நலனுக்கான நிதி ஒதுக்கீடு செய்வது மந்தமானது. மேலும், அரசுப் பள்ளிகளில் முட்டைகளைத் திருடி ஹோட்டல்களுக்கு விற்பது, பள்ளிகளில் உரிமையுடன் முட்டை கேட்ட மாணவர்களை அடிப்பது,






மாணவர்களுக்கு சமைக்கும் உணவில் பல்லி விழுந்து 17 மாணவர்கள் அரசு மருத்துவமனையில் உயிருக்குப் போராடியது போன்ற விஷயங்கள் திமுக ஆட்சியில் மட்டுமே நடக்கின்றன. ஒவ்வொரு குழந்தைக்கும் ஊட்டச்சத்து மிக்க உணவு வழங்குவது அரசின் கடமை என்ற அடிப்படை உண்மையை திமுகவினர் மறந்துவிட்டனர்.

## சத்துணவு திட்டத்திற்காக எம்.ஜி.ஆர் தனது சொந்த ஊதியத்திலிருந்து பணம் வழங்கினார்;

ஆனால் இன்று, அந்த உணர்வு காணாமல் போயுள்ளது. எம்.ஜி.ஆர் உருவாக்கிய சத்துணவுத் திட்டம் என்பது, அரசின் கொள்கை அல்ல. அது திராவிட சமூக நலத்தின் சின்னம்.

தமிழ்நாட்டைக் ‘கல்வியில் சிறந்த மாநிலம்‘ என்று இந்தியா போற்றுகிறது. அந்தப் பெருமைக்கு அடித்தளமிட்ட, அசைக்க முடியாத தூணாக இருப்பது எம்.ஜி.ஆரின் சத்துணவுத் திட்டமே ஆகும். இன்று தமிழகத்தின் கல்விக்கூடங்களில் மொத்த சேர்க்கை விகிதம் (Gross Enrolment Ratio) உயர்ந்து, பெண்களின் கல்வி முன்னேற்றத்தில் இந்தியா முன்னணியில் இருக்கிறது  என்றால், அதற்குப் பெரும் காரணம் சத்துணவு திட்டம்தான்.

ஒரு தட்டில் பரிமாறப்பட்ட சத்துணவு, பல தலைமுறைகளை உயர்த்திய ஒரு பேரதிசயம் அது.



# கொடியில் மட்டுமல்ல கொள்கையிலும் அண்ணா...

- எழிலுருவன்

*அண்ணாவை கொடியில் மட்டுமில்லாமல் கொள்கையிலும் வைத்திருக்கும் கட்சிதான் அஇஅதிமுக.*

1972ஆம் ஆண்டு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அதிமுகவை ஆரம்பித்து அண்ணாவை கட்சிக் கொடியில் வைத்ததுமே பேரறிஞர் அண்ணாவுக்கும் திமுகவுக்கும் இருந்த கொஞ்சநஞ்ச தொடர்பும் அறுந்துபோனது.

அண்ணாவை முழுமையாக அதிமுக தனதாக்கி, அவரது கொள்கைகளை முற்றமுழுக்க உள்வாங்கிக் கொண்டது.

திராவிடத்தின் திருவிளக்கான அண்ணாவை மட்டுமல்ல, திராவிடத்தின் விடிவிளக்கான தந்தை பெரியாரையும் கூட தன் வசம் ஈர்த்து இழுத்துக் கொண்ட கட்சி அஇஅதிமுக.

ஆம். தந்தை பெரியாரை திமுகவின் முரசொலி நாளிதழ், பேசாத பேச்சில்லை. ஏசாத ஏச்சில்லை.

அதேவேளையில் 1977ஆம் ஆண்டு புரட்சித்தலைவரின் அஇஅதிமுக ஆட்சியைக் கைப்பற்றியது. அரியணை ஏறியது. அதன்பின் பெரியாரின் சீர்திருத்த எழுத்துக்களை தமிழகத்தில் நடைமுறைக்குக் கொண்டுவந்தவர் அப்போது முதல்வராக இருந்த புரட்சித்தலைவர்தான்.

தந்தை பெரியாரின் புத்தகங்களில் ஒன்று 'பொன்மொழிகள்.' 74 பக்கங்கள் கொண்ட புத்தகம் இது. திருச்சியில் உள்ள திராவிடமணி பதிப்பகம் வெளியிட்ட இந்த புத்தகத்தை, புதுக்கோட்டையில் உள்ள மதராஸ் ரிப்பன் பிரஸ் என்ற அச்சகம் அச்சிட்டிருந்தது.

பெரியாரின், பொன்மொழிகள் என்ற இந்த புத்தகம், 1950ஆம் ஆண்டு ஜூன் 20ஆம்தேதி அப்போதிருந்த காங்கிரஸ் அரசால் தடைசெய்யப்பட்டது. இந்தப் புத்தகத்துக்கு மட்டுமல்ல அதன் மொழிபெயர்ப்புக்கும் தடை விதிக்கப்பட்டது. அதன்பின்னர் 1967ஆம் ஆண்டு திமுக ஆட்சியைப் பிடித்து அதிகாரத்துக்கு வந்தது. ஆட்சிக்கு வந்த புதிதில் ஆரம்பகட்ட வளர்ச்சிப் பணிகளில் கவனம் செலுத்தியதால் பெரியாரின் பொன்மொழிகள் புத்தகத்துக்கு விதிக்கப்பட்ட தடை, பேரறிஞர் அண்ணாவுக்குக் கூட நினைவுக்கு வரவில்லை.

ஆனால், அண்ணாவுக்குப்பின் முதல்வர் பதவியைப் பிடித்த கருணாநிதி லஞ்சத்திலும் ஊழலிலும்தான் நாட்டம் காட்டினாரே தவிர, பெரியார் புத்தகத்துக்கு விதிக்கப்பட்ட தடையை அவர் நீக்கவில்லை. அந்த எண்ணமே அவருக்கு வரவில்லை.

இந்தநிலையில், 1979ஆம் ஆண்டு புரட்சித்தலைவர் ஆட்சிக்காலத்தில், பெரியாரின் நூற்றாண்டு விழாக்குழு, இந்த புத்தகத்துக்கான தடையை நீக்கப் பரிந்துரை செய்தது. அதை உடனே ஏற்று தந்தை பெரியாரின் பொன்மொழிகள் புத்தகத்துக்கான தடையை நீக்கியவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.தான்.

ஆக, பேரறிஞர் அண்ணாவை மட்டுமின்றி, பெரியாரையும் கூட இன்றளவும் கொடியிலும் கொள்கையிலும் கொண்டு செயல்படும் கட்சி அஇஅதிமுகதான்.

## இந்த சீரிய பணி என்றும் தொடரும்






தமிழகமுதல்வர்புரட்சித்தலைவர்

பெரியார் புத்தக தடை நீக்கம்

அரசு உத்தரவு

சென்னை ஜூன் 17- தந்தை பெரியார் எழுதிய புத்தகத்துக்குக் காங்கிரஸ் ஆட்சியில் விதிக்கப்பட்ட தடையை புரட்சித்தலைவர் அரசு ரத்து செய்தது. தந்தை பெரியாருக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் கருணாநிதி தனது 7 ஆண்டு கால ஆட்சியில் செய்யாததை புரட்சித்தலைவர் செய்துள்ளார்.

# சினிமாவும் அரசியல் பேசியது...

- ராகுல் ஸ்ரீனிவாசன்

தமிழ்நாட்டில் எங்கு சென்றாலும் அந்த மூன்றெழுத்தை பார்க்காமல் கடந்து சென்றிட முடியாது. பேருந்து நிலையம், பள்ளி, கல்லூரி, நூலகம், பூங்கா, பாலம், ரோடு என்று அந்த மூன்றெழுத்து ஆள் பெயர் கண்ணில் தென்பட்டுக்கொண்டே இருக்கும். யார் இவர் என்று ஆச்சர்யமாக பிரிட்டிஷ்காரன் தமிழ்நாட்டிற்கு வந்தால் கூட கேட்பான் Because அவர் தான் அண்ணா.

ஐந்தரை அடி உயர ஆள், மூக்குப்பொடி, கசங்குன வேட்டி சட்டை இதுதான் அண்ணாதுரையின் அடையாளம். மவுண்ட் ரோட் ஜங்ஷனில் வானத்தை நோக்கி ஒத்தை விரலை மேலே காட்டியபடி நின்றுக்கொண்டிருக்கும் அண்ணா சிலை சொல்லும் தமிழ்நாட்டின் அரசியல் ஜாதகத்தை.

## சினிமா எனும் அரசியல் ஆயுதம்...

சினிமாவை அரசியல் ஆயுதமாக்கி வெற்றி கண்டவர் அண்ணா. திராவிட இயக்க அரசியலை வலுவாக முன்னெடுத்து காங்கிரசுக்கு மாற்றாக இரண்டாம் பெரிய கட்சியாக கழகத்தை கொண்டுவர ஒரே வழி கலைத்துறை என அண்ணா முடிவு செய்தார்.

மேடை நாடகங்கள், சினிமா வசனங்கள் மூலம் அண்ணாவின் அரசியல் பிரசாரங்கள் வெடித்தன.

1948ம் ஆண்டு நல்ல தம்பி படத்துக்கு வசனகர்த்தாவாக அண்ணா திரைத்துறையில் நுழைந்தபோது திராவிட இயக்கத்துக்கும், திரைத்துறைக்கும் அது திருப்பு முனையாக அமைந்தது.

1949ம் ஆண்டு அண்ணாவின் கதை வசனத்துடன் வெளியான வேலைக்காரி படம் திரைத்துறையில் புரட்சியை ஏற்படுத்தியது. கடவுளைப் பற்றி தொடர்ந்து படங்கள் வந்துக்கொண்டிருந்த போது சாமானிய மனிதர்களைப் பற்றிய தமிழ்த் திரைத்துறையில் பேசிய முதல் படம் வேலைக்காரி. பண்ணையார் ஆட்சி செய்துக்கொண்டிருந்த காங்கிரஸ், நிலச்சுவான்தார்கள் கட்சி என அடையாளம் காணப்பட்டது. 'பணத்திமிரும், ஜாதித் திமிரும் இந்தச் சமுதாயத்தை ஆட்டிவைக்கும் கோரப்பிசாசுகள். அவற்றை ஒழிக்க வேண்டும்' என்று வேலைக்காரி படத்தில் அண்ணாவின் வசனங்கள் அரசியல் பேசின. திராவிடக் கொள்கைகளை மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பதில் திரைத்துறையில் அண்ணாவின் பிரசார பீரங்கியாக எம்.ஜி.ஆர். செயல்பட்டார்.

1951-ம் ஆண்டு வெளியான ஓர் இரவு திரைப்படத்தின் கதையும் ஒருநாள் இரவில் நடப்பது போன்றுதான் அமைக்கப்பட்டிருக்கும். படத்தின் திரைக்கதையை ஒரே இரவில் எழுதி முடித்தார் அண்ணா.

அன்றைய காலகட்டத்தில் ஓர் இரவு திரைப்படத்திற்கு, முதன்முதலில் 20,000 ரூபாய் ஊதியம் வாங்கியவர் அண்ணாதான். அண்ணாவின் சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் எனும் நாடகத்தில் முதன்முதலில் சிவாஜியாக நடித்த வி.சி.கணேசன் இன்றுவரை சிவாஜி என்றே அழைக்கப்படுகிறார்.

திரைப்படங்கள் மூலம் கல்வி, சமத்துவம், சமூகநீதி பெண்ணுரிமை குறித்து தொடர்ந்து பேசி வந்தார். அறிஞர் அண்ணா. திரைப்படங்களை ஓர் அரசியல் கருவியாகப் பயன்படுத்தி மக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தினார்.

தமிழ் சினிமாவை அரசியல் களமாக சிறப்பாக பயன்படுத்திக் கொண்டார். தனது எழுத்துக்களாலும், பேச்சாலும் அரசியலை தமிழ்சமூகத்திற்கு கடத்திவிட்டு தான் அண்ணா ஆட்சியில் அமர்ந்தார்.



**67 என்பது "அறிவு" அரியணை ஏறிய ஆண்டு.**

# அண்ணா கண்ட பெருங்கனவுப் பயணத்தில் 54வது ஆண்டு

**- தி.க. கவிதா**

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முடியும் என ஓடோடி உழைத்தவர் பேரறிஞர் அண்ணா. பெரியாரிய சிந்தனைகளை நனவாக்க, அண்ணா கண்ட பெருங்கனவுகள் ஏராளம். அவர் தலைமையில் தமிழகம் வளர்ச்சி பாதையை நோக்கி பயணம் 1967ல் தொடங்கியது. தமிழர்களுடைய போதாத காலமோ என்னமோ அது நிலைத்திருக்கவில்லை, தத்தளித்து கொண்டிருந்த தமிழர்களுக்காக காஞ்சீபுரத்தில் தோன்றிய கலங்கரை விளக்கம் அணைந்து போனது.

அண்ணா முன்னெடுத்த அரசியல் பல ஊழல்வாதிகளால் நாளுக்கு நாள் துயர நிலைக்கு சென்றது. அப்போது மக்களிடத்தில் "நாளை நமதே" என்று நம்பிக்கையை விதைத்து நாசக்காரர்களிடம் இருந்த தமிழ்நாட்டைக் காப்பாற்ற வந்தார் அண்ணாவின் இதயக்கனி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

பேரறிஞர் அண்ணாவின் கனவிற்கு மீண்டும் புத்துயிர் கொடுத்தார் புரட்சித்தலைவர். மக்களின் உரிமைக் குரலாய் ஓங்கி ஒலிக்க 1972-ல் அண்ணா வழி திராவிட அரசியலை முன்னெடுக்க அ.தி.மு.க என்னும் பேரியக்கத்தை உருவாக்கி பயணத்தை தொடங்கினார். எல்லாருக்கும் எல்லாமும் என்ற அண்ணாவின் கனவு மெய்ப்பட சத்துணவு திட்டம், உள்ளிட்ட திட்டங்களை நிறைவேற்றினார். எவர் சிந்தைக்கு எட்டாத பல திட்டங்களை கொண்டு வந்து எளிய மக்களையும் ஏற்றம் காணவைத்தார். புரட்சித்தலைவர். அவர் அறிமுகம் செய்த திட்டங்கள் வானில் மின்னும் நட்சத்திரங்கள் போல எண்ணிலடங்காதவை.

தமிழ்நாடு தன்னிகரில்லா மாநிலமாக உருமாறி வந்த நேரத்தில் அனைவரையும் உருக்குலைக்க வைத்தது புரட்சித் தலைவரின் மறைவுச் செய்தி.

புரட்சித்தலைவர் உயிருடன் இருந்த போது அடையாளம் இல்லாமல் இருந்த சதிக்காரர்கள் எல்லோரும் சதி செய்ய ஆரம்பித்தனர்.

கலங்கிய கண்களோடும், புண்பட்ட நெஞ்சத்தோடும் எதிர்காலம் இனிமேல் நமக்கில்லையென நம்பிக்கை இழந்த நேரத்தில், அதிமுக தொண்டர்கள் அனைவரையும் அரவணைத்து அரசியல் பயணத்தைத் தொடர்ந்தார் ஒரு இரும்பு பெண்மணி. அவர் வேறு யாருமில்லை புரட்சித் தலைவி அம்மா ஜெ.ஜெயலலிதா அவர்கள் தான். மீண்டும் தமிழகத்தில் பெரியாரின் திராவிடத்தை அண்ணாவின் வழியில் எம்.ஜி.ஆர். அவர்களைப் போலவே புரட்சித்தலைவி அவர்களும் அ.இ.அ.தி.மு.க.வுடன் பயணிக்கத் தொடங்கினார்.

பெண்கள் முன்னேற்றமே நாட்டினுடைய முன்னேற்றமென பெரிதும் பேசி வந்த பெரியாரின் கனவை, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றினார். மக்களுக்கான அரசியலை முன்னெடுத்த அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர் அவர்களை போல 'மக்களால் நான் மக்களுக்காக நான்' என அயராது பாடுபட்டார் அம்மா. அந்த நேரத்தில் பேரிடியாய் வந்தது அம்மாவின் மறைவுச் செய்தி.



அம்மாவின் மறைவுக்கு பிறகு அதிமுக தொலைந்தது என தீயசக்தி திமுகவினர் தமிழக மக்களுக்கும், கட்சிக்கும் தொல்லைகள் கொடுக்க ஆரம்பித்தனர். அந்த நேரத்தில் கழகத்தை புரட்சித்தலைவி அவர்களின் வழியில் கட்டுக்கோப்பாக வழிநடத்தினார் அதிமுக பொதுச்செயலாளர் புரட்சித்தமிழர் எடப்பாடி கே. பழனிசாமி.

அடிப்படை உறுப்பினரும் அதிமுகவை வழி நடத்த முடியும் என கூறிய அம்மா அவர்களின் வார்த்தைக்கு உயிர் கொடுத்து அதை உண்மையாக்கினார் புரட்சித்தமிழர் எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

புரட்சித் தலைவர், புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் மக்கள் எப்படி மகிழ்ச்சியாக இருந்தார்களோ, அதற்கு சற்றும் குறை வைத்திடாமல் தமிழின துரோகிகளை குமுறியழச் செய்தார் புரட்சித் தமிழர்.

அண்ணா வழி திராவிட பயணத்தில் புரட்சித்தலைவர் போலவும், புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் போலவும் அதிமுகவுடன் பயணித்து வருகிறார் புரட்சித் தமிழர்.

ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரியை கொண்டு வந்து, ஏழை எளிய மக்களின் மருத்துவக் கனவை நனவாக்க அரசுப்பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவித இட ஒதுக்கீடு பெற்றுத்தந்து பெரியார், அண்ணா கண்ட சமூகநீதி கனவை நிலைநாட்டினார் எடப்பாடி பழனிசாமி அவர்கள். காவிரி மேலாண்மை வாரியம் என தமிழகத்தின் மாநில உரிமைகளை அவர் நிலைநாட்டினார்.

புரட்சித் தலைவர் மற்றும் புரட்சித் தலைவி இவர்கள் இருவரையும் ஒருசேரக் காணும் அளவுக்கு இருக்கிறது எடப்பாடியார் அவர்களுடைய செயல்பாடுகள்.

54 ஆண்டுகள் மட்டுமல்ல இன்னும் 50 ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும், எத்தனை இடர்பாடுகள் வந்தாலும் அண்ணா வழியில் திராவிடப் பாதையில் அ.இ.அ.தி.மு.க. பயணிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைகளை செயல்படுத்தும் மாபெரும் பேரியக்கமாக அன்றும் இன்றும் என்றும் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் இருந்து வருகிறது.

> “ **மக்களால் நான் மக்களுக்காக நான்**



# பாரதியின் கனவை நனவாக்கிய அம்மாவின் தொட்டில் குழந்தைத் திட்டம்

- மயூரா அகிலன்



பெண் குழந்தை பிறந்தால் சுமை அதிகம் என நினைத்து பலரும் பெண் குழந்தைகளைக் கொலை செய்தல், பெண் குழந்தைகளைக் கைவிடுதல் போன்ற செயல்களில் ஈடுபட்டு வந்தனர். ஒரு குழந்தை பெண்ணாகப் பிறந்ததாலே அவள் சுமை இல்லை என்பதைக் கருத்தில் கொண்ட புரட்சித் தலைவி அம்மா கைவிடப்பட்ட அனைத்துப் பெண் குழந்தைகளையும் காத்து அவர்களுக்கான பாதுகாப்பான வாழ்க்கையை உருவாக்கும் வகையில், 1992ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா "தொட்டில் குழந்தை" என்ற உன்னத திட்டத்தைத் தொடங்கினார்.

## பெண் சிசுக்களை காக்கும் திட்டம்

தமிழ்நாட்டில் சில மாவட்டங்களில் பெண்ணாக பிறந்த ஒரே ஒரு காரணத்துக்காக, பிறந்த சில மணிநேரங்களிலேயே விஷத்தன்மை கொண்ட கள்ளிப்பாலை கொடுத்து, எத்தனையோ பிஞ்சுக் குழந்தைகளின் உயிர்கள் பறிக்கப்பட்டன. கொலை செய்ய மனமில்லாத பலர் குழந்தைகளை குப்பை தொட்டியில் வீசிச் சென்றனர். இவற்றை தடுப்பதற்காக மத்திய மற்றும் மாநில அரசால் பல்வேறு வகையான திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றில் மிக முக்கியமான திட்டம் தான் தொட்டில் குழந்தை திட்டம். பெண் சிசுக்கொலையை தடுக்கவும், பெண் குழந்தைகளை மரணத்தின் பிடியில் இருந்து காப்பதுமே தொட்டில் குழந்தை திட்டத்தின் நோக்கமாகும்.





## பெண் சிசுக்கொலை தடுப்பு

பெண்ணாக பிறந்தாலே பாவம் என்றும், திருமணத்தின் போது அதிக நகை போட்டு வரதட்சணை கொடுத்து திருமணம் செய்து தர வேண்டும் என்றும் நினைத்த ஒரு சமுதாய மக்கள், கருவில் இருக்கும் போதே ஸ்கேன் செய்து பார்த்து அது பெண் என்று தெரிந்தாலே சமாதி கட்டியிருக்கிறார்கள். தமிழகத்தில் சில மாவட்டங்களில் அதிகளவிலான பெண் சிசுக்கொலைகள் நடப்பதை அறிந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண் குழந்தைகள் கொலை செய்யப்படுவதை முற்றிலும் ஒழித்திடவும், பெண் குழந்தைகளை மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றவும் புதுமையான திட்டத்தினை அறிவித்தார். அதுதான் தொட்டில் குழந்தை திட்டம்.



## மனக்கவலை போக்கிய திட்டம்

சமுதாயத்தில் பெண் சிசுக்கொலைகள், கருக்கலைப்புகளை முற்றிலும் ஒழிப்பதே தொட்டில் குழந்தை திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். மேலும், குழந்தை பெற்றுக் கொள்ள முடியாத தம்பதிகளுக்கு குழந்தை இல்லையே என்ற மனக்கவலையை போக்குவதும் இத்திட்டத்தின் மற்றொரு குறிக்கோளாகும்.

## தொட்டில் குழந்தை திட்டத்தின் நன்மைகள்

தொட்டில் குழந்தை திட்டம் தொடங்கப்பட்ட உடன் மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், குழந்தைகள் இல்லம் மற்றும் காப்பகங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டன. பெண் குழந்தை பிறந்து, வறுமை காரணமாகவோ அல்லது வேறு எந்தக் காரணமாகவோ குழந்தையை வளர்க்க முடியாது என நினைப்பவர்கள் இந்த தொட்டில்களில் குழந்தைகளை வைத்துவிடலாம்.

தொட்டிலில் விடப்பட்ட குழந்தைகள் மாவட்ட குழந்தைகள் நல குழுமம் மற்றும் தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் அரசு நேரடி கண்காணிப்பில் பிரத்யேக இல்லங்களில் பராமரிக்கப்பட்டு பின்னர், அரசு விதிகளுக்குட்பட்டு குழந்தை இல்லாத தம்பதிகளுக்கு சட்டப்படி தத்துக் கொடுக்கப்பட்டன.



நாளடைவில் தொட்டில் குழந்தை திட்டத்தில் சில மாற்றங்களும் கொண்டுவரப்பட்டன.

அதாவது, வளர்க்க முடியாத பச்சிளம் குழந்தைகள் பெண்ணாக இருந்தாலும் சரி, ஆணாக இருந்தாலும் சரி இந்த தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ் அரசிடம் ஒப்படைக்கலாம் என்று அரசு அறிவித்தது. இந்த ஒரு திட்டத்தின் மூலம் குழந்தைகள் மாற்றுக் குடும்பத்துடன் மறுவாழ்வு பெறுவதுடன், குழந்தை இல்லாத தம்பதிகளுக்கு ஒரு குழந்தையை வளர்ப்பதற்கான வாய்ப்பும் கிடைக்கிறது.

அதிமுக அரசு கொண்டு வந்த இந்தத் திட்டம் திமுக ஆட்சி காலத்தில் முழுமையாக செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன் வைக்கப்படுகிறது.

பச்சிளம் குழந்தைகள் கொல்லப்படுவதும், குப்பையில் வீசப்படுவதும், இன்றும் தொடர்வது பல்வேறு கேள்விகளை முன்வைத்திருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாகவே பெண் சிசுக்கள் கொல்லப்படுவதும், குப்பைகளில் முட்புதர்களில் வீசப்படுவதும் அதிகரித்திருப்பதாக புகார் எழுந்துள்ளது.

தொட்டில் குழந்தைத் திட்டம் குறித்து விழிப்புணர்வு தற்போது குறைவாக இருப்பதே அதற்கான காரணமாகும். பச்சிளம் குழந்தைகள் கைவிடப்படுவதையும், சிசுக்கொலையையும் தடுக்க மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பணியில் அரசு தீவிரமாக ஈடுபட வேண்டியது அவசியமாகிறது.



# அறிஞர் அண்ணாவின் புத்தக ஆர்வம்!

- எழிலுருவன்

*அண்ணா என்ற பேராற்றலுக்கும், அறிவூட்டும் புத்தகங்களுக்கும் இடையில் இருந்த தொடர்பு அலாதியானது.*



## அண்ணா ஒரு புத்தகப்பிரியர்

**‘இந்த நாட்டிலே நம்மவர் வீடு கட்டுவர். அதிலே பல அறைகளும் அமைப்பர். மாட்டுக் கொட்டகை ஒருபால். பொக்கிஷ அறை ஒருபால், சமையலறை மற்றொரு பால்.. மற்றெதை மறந்தாலும் ஆண்டவனுக்குப் பூசை செய்ய அறை அமைக்க மட்டும் மறவார். ஆனால் அறிவூட்டும் ஏடுகள் நிறைந்த படிப்பறையைப் பற்றிய பகற்கனவும் காணார்’**

இப்படி கூறி, வீட்டுக்கு வீடு படிப்பறை வேண்டும் என வலியுறுத்தியவர் அண்ணா. பரபரப்பான அரசியல் வாழ்விலும் சில மணிநேரத்தை புத்தகங்களை வாசிப்பதற்காக அவர் ஒதுக்க மறந்ததில்லை. பொதுக்கூட்டங்களுக்குப் போய்விட்டு நேரம் கடந்து வீட்டுக்கு வந்தாலும் புத்தகங்களைப் புரட்ட அண்ணா தவறமாட்டார்.

போராட்டத்தில் கலந்து கொண்டு சிறையில் இருக்கும்போது தன்னைக் காண வருபவர்களிடம் அறிஞர் அண்ணா கேட்கிற ஒரே பொருள் புத்தகம். அண்ணா ஒருமுறை டெல்லி சென்றிருந்த நேரம், அங்கே பிளாட்பாரக் கடையில் ஒரு வரலாற்றுப்புத்தகத்தை வாங்கினார். அந்த நூல் அண்ணாவுக்கு மிகவும் பிடித்திருந்தது.

‘நாம் எப்படி சென்னை திரும்பப்போகிறோம்?’ என்று உதவியாளரிடம் கேட்டார் அண்ணா. ‘விமானத்தில் அண்ணா. விமானப்பயணத்துக்கு டிக்கெட் வாங்கிவிட்டேன்’ என்றார் உதவியாளர். ‘அதை ரத்து செய்துவிட்டு ரயிலில் பயணம் செய்யலாம்’ என்றார் அண்ணா. ‘இந்த நூலைப் படித்து முடிக்க ரயில் பயணம்தான் சிறந்தது. இரண்டு இரவுகள் கிடைத்தால் இந்தப்புத்தகத்தை படித்து முடித்து விடுவேன்’ என்றார் அவர். அண்ணாவின் புத்தகங்கள் மீதான காதல் அந்த அளவுக்கு இருந்தது.

புத்தக ஆர்வலராக மட்டுமின்றி புத்தகங்களைப் படைக்கும் சிறந்த எழுத்தாளராகவும் அறிஞர் அண்ணா திகழ்ந்தார்.

நாடகம், புதினம், சிறுகதை, சொற்பொழிவு, கடிதங்கள், கட்டுரைகள், என பலதுறைகளில் படைப்பாக்க ஆற்றல் கொண்ட அண்ணா எண்ணற்ற புத்தகங்களையும் எழுதியிருக்கிறார்.

# அறிஞர் அண்ணா பற்றி Gen Z தலைமுறையினர் அறிய வேண்டிய தகவல்கள்

- மைவிழி

அறிஞர் அண்ணா என்றால் நம் நினைவுக்கு வருவது கம்பீரமான அரசியல் தலைவர், தமிழ்நாட்டு இளைஞர்களை உரிமையோடு தம்பி என்று அழைத்த அண்ணா, தமிழ்நாட்டின் அரசியலில் மிக பெரிய திருப்புமுனையாக அமைந்தவர் மற்றும் இந்தி எதிர்ப்புப் போராளி.

இந்தச் சாதனைகளின் பிரம்மாண்டத்திற்குள், ஒரு பன்முகக் கலைஞன் மற்றும் மனிதாபிமானியான அண்ணா மறைந்திருக்கிறார் என்பதே நிதர்சனம். அவர்தம் வாழ்வின் அறியப்படாத பக்கங்கள், ஒரு தலைவனின் தூய்மையான எளிமையையும், ஆழமான அறிவையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

அண்ணாவின் ஆரம்ப வாழ்க்கை அரசியல் மேடைகளில் பேசப்பட்ட அளவுக்கு முழுமையாக அறியப்படவில்லை. அவர் காஞ்சிபுரத்தில் ஒரு நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவர்.

இளமையில் வறுமை காரணமாக, பள்ளிப்படிப்பை முடித்ததும் காஞ்சிபுரம் நகராட்சியில் எழுத்தராகப் பணியாற்றினார்.

இந்தச் சுருக்கமான உத்தியோக அனுபவம் தான், அடித்தட்டு மக்களின் கஷ்டங்களை அவருக்கு உணர்த்தியிருக்கும். ஏழ்மையால் மேற்கல்வியைத் தொடர முடியாத சூழலில், கல்லூரித் தலைவரின் உதவியோடுதான் அவர் தன்னுடைய பொருளாதாரம் மற்றும் அரசியல் முதுகலைப் பட்டங்களை முடித்தார்.

அண்ணாவின் அரசியல் ஆளுமையை வடிவமைத்தது அவரது இந்தப் படிப்பும், புத்தக வாசிப்பும்தான். மேலும், தனது 21 வயதிலேயே ராணி அம்மையாரைத் திருமணம் செய்துகொண்ட அண்ணாவுக்கு நேரடி வாரிசுகள் இல்லை. ஆனால், தன் குடும்பத்தில் உள்ள குழந்தைகளைத் தத்தெடுத்து, தனது அரசியல் தொண்டர்களை எல்லாம் "தம்பி" என்று பாசத்துடன் அழைத்ததன் மூலம், அவர் ஒரு பெரிய குடும்ப அமைப்பையே உருவாக்கினார்.

அண்ணாவின் மேடைப் பேச்சின் அடுக்குமொழியும், பேச்சில் இருந்த எதுகை மோனையும் மட்டுமே பலருக்குத் தெரியும். ஆனால், அவர் ஒரு சிறந்த எழுத்தாளர் என்பதை பலர் மறந்து விடுகிறார்கள். வேலைக்காரி, ஓரிரவு போன்ற நாடகங்கள் திரைப்பட வடிவம் பெற்றன என்றாலும், , ரங்கோன் ராதா, பார்வதி பி.ஏ., தசாவதாரம் போன்ற பல நாவல்களையும், நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் அவர் எழுதியுள்ளார்.

உலக இலக்கியப் பரப்பிலேயே, ஒரு தலைவர் தன் தொண்டர்களுக்கு எழுதும் கடிதங்களை ஒரு தனி இலக்கிய வடிவமாக (தம்பிக்குக் கடிதம்) மாற்றிய பெருமை அண்ணாவுக்கு மட்டுமே உண்டு. அவர் பேசியது போலவே எழுதினார், எழுதியது போலவே பேசினார். இதனால் தான், திரு.வி.க. போன்ற பெரிய தமிழறிஞர்கள்கூட, அண்ணாவின் எழுத்துநடையை "அண்ணா நடை" என்று பாராட்டினர். அத்துடன், அவர் பல அரிய கவிதைகளையும் எழுதியுள்ளார் என்பது ஒரு மறைக்கப்பட்ட கலைப் பரிமாணம்.

அறிஞர் அண்ணாவின் அறிவுத்திறன் மற்றும் சமயோசிதம் எப்போதும் நகைச்சுவை உணர்வுடன் பிணைந்திருந்தது. அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவர், A, B, C, D ஆகிய ஆங்கில எழுத்துக்கள் வராத நூறு வார்த்தைகளைக் கேட்க, உடனடியாக 1 முதல் 99 வரை ஆங்கில எண்களைச் சொல்லி, கடைசியில் "Stop" என்று நிறுத்தி அசர வைத்தது அவரது அறிவு மேலாண்மைக்குச் சிறந்த உதாரணம்.

அதேபோல், இந்தி மொழியைத் திணிப்பவர்களுக்குப் பதிலடி கொடுக்கும்போது, "இந்தி பெரும்பான்மை மொழி என்பதால் தேசிய மொழியாகிறது என்றால், புலியை ஏன் தேசிய விலங்காக அறிவிக்க வேண்டும்? எலிதானே இங்கு பெரும்பான்மை? மயிலை ஏன் தேசியப் பறவையாக அறிவிக்க வேண்டும்? காகம்தானே பெரும்பான்மை?" என்று கேட்டு, சிரிப்பின் மூலம் சிந்திக்க வைத்தவர். இந்த நகைச்சுவை அஸ்திரம் தான் அவருடைய அரசியல் ஆயுதமாகவும் இருந்தது.

இறுதியாக, அவர் முதலமைச்சரான போது, அரசுச் செலவில் தன் வீட்டிற்குப் போடப்பட்ட ஆடம்பர மரச்சாமான்களைப் பார்த்து, "முதலமைச்சர் பதவி என்பது கிரீடம் அல்ல, அது ஒரு வேலை. ஆடம்பரம் தேவையில்லை!" என்று கோபப்பட்டு அவற்றை அகற்றச் செய்த நேர்மை, அதிகாரத்தின் மீது அவர் கொண்டிருந்த பற்றின்மையைக் காட்டுகிறது. இந்தப் பண்புகளால்தான் அவர் வெறும் தலைவராக இல்லாமல், ஒரு பேரறிஞராகவும் என்றும் நிலைத்து நிற்கிறார்.

# விடுதலைக்கு வழிவகுத்த நாயகன் அண்ணா

- லோகித்

1968ஆம் ஆண்டு. அமெரிக்காவுக்குப் பயணம் செய்யும் வழியில் வாடிகன் நகருக்குச் சென்றார் அறிஞர் அண்ணா. அங்கு உலக ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்துவர்களின் தலைவரான போப்பாண்டவர் ஆறாவது பாலுடன் அண்ணா சந்திப்பை நிகழ்த்தினார். பாப்பிறையுடன் அண்ணாவின் சந்திப்புக்கு ஒதுக்கப்பட்ட நேரம் ஐந்தே மணித்துளிகள்தான். ஆனால் அண்ணாவின் பேச்சு பாப்பிறையைக் கவர்ந்ததால் அந்த சந்திப்பு 70 நிமிடங்களாக நீண்டது. அண்ணாவின் பேச்சில் மனம் கவரப்பட்ட போப்பாண்டவர் அண்ணாவிடம், 'ஏதாவது கேளுங்கள்' என்றார். அப்போது அண்ணா விடுத்த வேண்டுகோள். 'ரானடேயை விடுதலை செய்ய உதவுங்கள்' என்ற வேண்டுகோள்.

## யார் அந்த ரானடே? ஒரு சிறிய ஃபிளாஷ்பேக்.

இந்தியா விடுதலையடைந்த பிறகும், கோவா பகுதியை ஆண்ட போர்ச்சுக்கல் நாட்டவர்கள் கோவாவை விடுவிக்க மறுத்தனர். அவர்களுக்கு எதிராக விடுதலைப் போராட்டம் நடைபெற்றது.

அந்த விடுதலைப்போராட்டத்தில் மோகன் ரானடேயும் சேர்ந்து கொண்டார். அவர் பிறப்பால் மராத்தி பிராமணர். அவரது இயற்பெயர் மனோகர் ஆப்தே. கைது நடவடிக்கைகள், தலைமறைவு வாழ்க்கை என்று வாழ்ந்த அவர், மோகன் ரானடே என்று பெயரை மாற்றிக் கொண்டார்.

1953ல் ஆசாத் கோமந்தக் தள் என்ற ஆயுத அமைப்பில், இணைந்த ரானடே போலீஸ் மற்றும் சுங்க நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தி ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை பறிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.



1955 ஆகஸ்ட் 18 அன்று, காவலர் கஸ்டோடியோ பெர்னாண்டஸ் என்பவர் இந்தியக் கொடியை கிழித்து மிதித்ததற்காக ஆத்திரமடைந்த ரானடே, இரவில் அவரது வீட்டுக்குச் சென்று அவரை சுட்டுக் கொன்றார்.

1955 அக்டோபர் 22 அன்று, பெடிம் காவல் நிலையத்தில் ஆயுத கொள்ளை முயற்சியில் ரானடே ஈடுபட்ட போது, போலீசார் சுட்டதில் வயிற்றில் காயமடைந்தார். அதன் பின்னர் கைது செய்யப்பட்டு போர்ச்சுகல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு அவருக்கு 26 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. லிஸ்பனுக்கு அருகே உள்ள காசியாஸ் சிறையில் அடைபட்டார். 1961-ல் கோவா இந்தியாவுடன் இணைந்த பின்னர் ரானடேயை எல்லோரும் மறந்து விட்டனர். அவரை மறக்காமல் நினைவில் வைத்திருந்தவர் அறிஞர் அண்ணா ஒருவர்தான். போர்ச்சுக்கல் நாடு ஒரு ரோமன் கத்தோலிக்க நாடு என்பதால் போப்பாண்டவரின் பரிந்துரை காரணமாக 14 ஆண்டுகாலம் சிறையில் இருந்த ரானடே 1969ஆம் ஆண்டு ஜனவரி மாதம் விடுதலை ஆனார்.

விடுதலையடைந்த ரானடே இந்தியா திரும்பியதும், முதல் வேலையாக அறிஞர் அண்ணாவை சந்தித்து நன்றிகூற நினைத்தார். ஆனால், அண்ணா அப்போது இல்லை. புற்றுநோய் காரணமாக அண்ணா மறைந்து விட்டார். சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அண்ணாவின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த மட்டுமே ரானடேயால் முடிந்தது.

அடிப்படையில் அறிஞர் அண்ணா திராவிடக் கொள்கையாளர். ரானடே ஒரு மராத்தி பிராமணர். ஆனால், கொள்கை கோட்பாடுகளை மீறி, அறிஞர் அண்ணா மனிதாபிமானத்துடன் ரானடேயின் விடுதலைக்கு வழிகோலியது குறிப்பிடத்தக்கது.

கொள்கை கோட்பாடுகளைக் கடந்த மகத்தான மனிதநேயம் அது.



மக்களால்

**தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தங்களுக்குத் தாங்களே நம்பிக்கையுள்ளவர்களாக நடந்துகொண்டால் போதாது.**

தேர்ந்தெடுத்த மக்களுக்கும் நம்பிக்கையுள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டும்.



# திராவிட Quiz

**சுத்தி சுத்தி வந்தீக....குவிஸ்**

**பேரறிஞர் அண்ணாவைப் பற்றி உங்களுக்கு எவ்வளவு தெரியும்?**
**ஏங்க. அண்ணாவைப் பற்றி தெரியாமலா தமிழ்நாட்டிலே இருக்கோம் என்கிறீர்களா?**
**அப்படின்னா இதோ உங்களுக்காக இந்த புதிர்ப்போட்டி. என்ன ஆரம்பிக்கலாமா? தயாரா நீங்க?**

**1**

பேரறிஞர் அண்ணா பிறந்த ஊர் எது தெரியுமா?

- செங்கல்பட்டு என்பவர்கள் 10க்குப் போங்க.
- காஞ்சிபுரம் என்பவர்கள் 14க்குப் போங்க.

**2**

நெத்தியடி. அண்ணா ஒரே இரவில் வசனம் எழுதி முடிச்ச திரைப்படம் "ஓர் இரவு" தான். அந்த படத்தோட பெயருக்கேத்த மாதிரி ஒரே இரவில் அவர் வசனத்தை எழுதி முடிச்சார். **சரி.**

- அப்படியே 6க்கு ஜம்ப் பண்ணுங்க.

**3**

ஆங்கிலத்தில் மிகப்பெரிய நாடக ஆசிரியர்களில் ஒருவர் வில்லியம் ஷேக்ஸ்பியர். அவருக்கு அடுத்தபடி வேறவேற நாடக ஆசிரியர்களும் இங்கிலாந்தில் இருந்தாங்க. அறிஞர் அண்ணா கூட மிகச்சிறந்த நாடக ஆசிரியர்தான். நாடகத் திறமையிலும், அறிவிலும் அவரை இங்கிலாந்திலே இருக்கிற ஒருத்தரோட ஒப்பிடுவாங்க. **அவர் யார்?**

- இப்சன் என்பவர்கள் போங்க 7க்கு.
- பெர்னார்ட் ஷா என்பவங்க போங்க 13க்கு.

**4**

அறிஞர் அண்ணா ஏ.வி.எம் நிறுவனத்துக்காக ஒரே இரவில் உட்கார்ந்து ஒரு படத்தோட வசனத்தை எழுதி முடிச்சார். அந்த திரைப்படத்தோட **பேர் என்ன தெரியுமா?**

- வேலைக்காரி என்கிறவங்க 9க்குப் போங்க.
- ஓர் இரவில் என்கிறவங்க 2க்கு வாங்க.

**5**

சொல்லி அடிச்ச கில்லி.

- நீங்க 12க்கு வரலாமே?

**6**

இதோ ஒரு கேள்வி. அறிஞர் அண்ணா மிகப்பெரிய இலக்கியவாதி மட்டுமில்லை. அவர் ஒரு பத்திரிகையாளரும் கூட. அவர் சொந்தமா தொடங்கி ஆசிரியரா இருந்த

**இதழோட பெயர் என்ன தெரியுமா?**

- திராவிட நாடு என்கிறவங்க 5க்கு வாங்க.
- இல்லை குடியரசு என்கிறவங்க அப்படியே 11க்குப் போங்க.

**7**

இல்லீங்கோ.

- 6க்கு வாங்கோ...

**8**

கலக்கிட்டீங்க.
**ஒருவழியா இந்த புதிர்ப்பிரச்சினை ஓய்ஞ்சுது.**

- 15க்கு போகலாம் வாங்க.

**9**

சொதப்பிட்டீங்க. ஓர் இரவில் திரைப்படத்துக்காகத்தான் அண்ணா ஒரே இரவில் உட்கார்ந்து கதை வசனம் எழுதினார்.

---

- *சரி இப்ப வாங்க 12க்கு.*

**10**

இல்லைங்க. செங்கல்பட்டுக்கும் அண்ணாவுக்கும் தொடர்பு இல்லை. காஞ்சிபுரம்தான் அண்ணா பிறந்த ஊர். **பரவாயில்லை விடுங்க.**

---

- *3க்குப் போகலாம் வாங்க.*

**11**

ம்ஹூம். பெரியாரோட குடியரசு இதழ்ல அண்ணா துணை ஆசிரியரா இருந்தார். பிறகு, விடுதலை இதழோட ஆசிரியரா இருந்தார். திராவிடநாடு இதழ்தான் அண்ணா சொந்தமா தொடங்கி ஆசிரியரா இருந்த இதழ்.

**அட பரவாயில்லை. விடுங்க.**

---

- *தாவுங்க 12க்கு.*

**12**

அறிஞர் அண்ணாவோட இறுதி ஊர்வலத்துக்கு கூடின கூட்டம் இருக்கு பாருங்க. அது இன்னைக்கு வரைக்கும் கின்னஸ் உலக சாதனை. அந்த அளவுக்கு லட்சக்கணக்கான பேர் சென்னையில் அண்ணாவோட இறுதி ஊர்வலத்துக்கு கூடினாங்க. சரி. **அப்படி கூடினவங்க எத்தனை லட்சம் பேர்?**

---

- *பத்து லட்சம் என்பவங்க 16க்குப் போய் பாருங்க.*
- *பதினைந்து லட்சம் என்பவங்க 8க்குப் போய் பாருங்க.*

**13**

அபாரம் போங்க. அறிஞர் அண்ணாவை தென்னாட்டு பெர்னார்ட் ஷா அப்படின்னு பாராட்டுவாங்க.

---

- *இப்ப 4க்கு வாங்க.*

**14**

அட அசத்திட்டீங்க. அண்ணா பிறந்த ஊர் காஞ்சிபுரம்தான். காஞ்சியிலே ஒரு புத்தன் பிறந்தான் அப்படின்னு அண்ணாவைப் பற்றி ஒரு பாட்டு கூட இருக்கே.

**சரியான பதிலுக்குப் பாராட்டுகள்.**

---

- *வாங்க 3க்குப் போகலாம்.*

**15**

வாங்க. எடுத்த எடுப்பிலேயே எல்லா கேள்விகளுக்கும் சரியான பதில் தந்திருந்தா நீங்க ஒரு அரசியல் நிபுணர் அல்லது நிபுணி. எல்லா பதிலுமே தப்பா? கவலைப்பட வேண்டாம்.

**நீங்க பேரறிஞர் அண்ணாவைப் பத்தி இன்னும் தெரிஞ்சுக்க வேண்டிய விஷயம் நிறைய இருக்கு. அவ்வளவுதான்.**


**16**

அடப்பாவமே. மக்களோட எண்ணிக்கையிலே சில லட்சங்களை குறைச்சிட்டீங்க. அண்ணாவோட இறுதி ஊர்வலத்திலே கூடினவங்க மொத்தம் 15 லட்சம் பேர். சரி

---

- *கடைசியா 15க்கு வாங்க.*

# திராவிட ஜூன்



கிணறு வெட்ட...
பள்ளிக்கரணைச் சதுப்பு நில ஊழல்
160 கோடி ஒப்பந்த கொள்முதல் லாரி ஊழல்
888கோடி ஊழல்
தோண்ட தோண்ட புதுசு புதுசா கிளம்புதே..

# திராவிட காமிக்ஸ்



டேய் ஜாலியா இருடா..
அடுத்து வர்ற எலக்சன்
கண்டிப்பா நம்ப தான்டா
ஜெயிப்போம்.. பொய்க்கு மேல
பொய் சொல்லியிருக்கோம்.
ஆமாடா.
கண்டிப்பா நம்ம தான்
ஜெயிப்போம்.
நீ தாண்டா
பள்ளிக்கல்வித்துறைக்கு
அமைச்சர். அப்பாகிட்ட
சொல்லிட்டேன்.
டேய் எனக்கு
அந்த துறை வேணாம்டா.
நீட் தேர்வ ரத்து பண்ணலன்னா
என்னைய பொளந்துருவாங்க
விடுடா மச்சி
பாத்துக்கலாம். சரி
கிளம்பு போலாம்..
எங்கடா?
வேர்
இஸ் த பார்ட்டி?

# கேள்விகளும்
# திராவிட பதில்களும்

**1. கொரோனா தொற்றுக் காலத்தை தமிழக அரசு எவ்வாறு கையாண்டது?**

S. விமல் ராஜ், நாமக்கல்

கொரோனா காலத்தில் மாவட்ட மருத்துவமனைகளில் ஆக்சிஜன் ஆலைகள், ஐ.சி.யு. படுக்கைகள், மருத்துவ உபகரணங்கள் அதிகமாக கொள்முதல் செய்யப்பட்டன. மேலும், ஒரே ஆண்டில் பதினொன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் திறக்கப்பட்டதால், சிகிச்சை இன்னும் எளிதாகியது.

**2. எடப்பாடியார் கொண்டு வந்த 7.5% இடஒதுக்கீடு எவ்வாறு மருத்துவத் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?**

K. தமிழரசன், ஆண்டிபட்டி.

நீட் தேர்வை வைத்து திமுக அரசியல் செய்து கொண்டிருந்த சூழலில், மாணவர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டி, எடப்பாடியார் 7.5% இட ஒதுக்கீட்டை வழங்கினார். இதன் மூலம் 4,000-த்திற்கும் மேற்பட்ட ஏழை மாணவர்கள் மருத்துவராகியுள்ளனர். இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையாகும்.

**3. மாநிலம் முழுவதும் சுயஉதவிக் குழுக்கள் உருவாக வழிவகுத்த நடவடிக்கைகள் என்னென்ன?**

M. சந்தியா, திண்டுக்கல்.

மாநிலம் முழுவதும் மகளிர் சுயஉதவிக் குழுக்களை (SHGs) உருவாக்குவதில் புரட்சித் தலைவி முக்கியப் பங்காற்றினார். இதன் மூலம் சுயஉதவிக் குழுக்களின் எண்ணிக்கை 6.08 லட்சமும் ஆக உறுப்பினர்களின் எண்ணிக்கை 92 லட்சமும் உயர்ந்தது. இந்த முயற்சி 2011 முதல் 2021 வரை ₹84,815 கோடி கடன் இணைப்பை எளிதாக்கியது. மேலும், 20,000 சுயஉதவிக் குழுப் பயிற்சியாளர்களுக்கு "அம்மா மொபைல் போன்கள்" வழங்கப்பட்டன. இவை அனைத்தும் பெண்களின் பொருளாதார சுதந்திரத்தை வலுப்படுத்தின.

**4. ஏன் தமிழகத்தில் மன்னராட்சி தொடர்கிறது?**

B. வினிதா, செங்கல்பட்டு

தமிழகத்தில் திமுக என்ற குடும்ப முன்னேற்றக் கழகம் இருக்கும் வரை, திமுகவின் குடும்ப நபர்கள் மட்டுமே ஆட்சிப் பொறுப்புகளில் அமர முடியும். தமிழகத்தில் 2026 தேர்தலில் மன்னராட்சி முழுவதுமாக ஒழிக்கப்படும்; அதிமுக-வின் ஜனநாயக ஆட்சி மலரும்.

**5. ஏன் அதிமுக இத்தகைய வாரிசு அரசியல் கொள்கையை எடுக்கவில்லை?**

N. சுரேஷ், சேலம்

அதிமுக மக்களுக்காகவும் தொண்டர்களுக்காகவும் தொடங்கப்பட்ட கட்சி. இதில் சாதாரண தொண்டன்கூட முதலமைச்சராகலாம் என்பதற்கான சான்று தான் எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள். மேலும், அண்ணா வழி திராவிடத்தை பின்பற்றும் அதிமுக ஒருபோதும் வாரிசு அரசியலை பின்பற்றாது.

**6. 2021 வாக்குறுதிகளுக்குப் பிறகு ஈழப் பிரச்சினையில் திமுக எடுத்த நடவடிக்கை என்ன?**

S. சந்தோஷ், தர்மபுரி

2021 தேர்தல் வாக்குறுதியில் ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு சர்வதேச விசாரணை, ஐ.நா. தலையீடு, அரசியல் உரிமை என எண்ணற்ற வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. ஆனால் அனைத்தையும் ஆட்சிக்கு வந்த பிறகு காற்றில் பறக்க விட்டார்கள்.

**7. "தேநீர் கடை டு மருத்துவர்" மாணவனின் உணர்ச்சிகரமான கடிதம் மனதை உருக்கியது. இதுபோல் மேலும் கடிதங்கள் அண்ணா வழி திராவிட இதழில் தொடருமா?**

R.ரேவதி, மதுரை

கண்டிப்பாக. அதிமுக செயல்படுத்திய நலத்திட்டங்களில் பயனடைந்தோர் தங்கள் கடிதங்களை எங்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

**8. ஸ்டாலின் மாடல் ஆட்சியில் தான் "தூய்மை பணியாளர்கள்" என்று பெயர் மாற்றப்பட்டதா?**

K. ஹரிஷ், திண்டிவனம்

வழக்கமாக அதிமுக கொண்டு வந்த நலத்திட்டங்களுக்குதான் ஸ்டாலின் ஸ்டிக்கர் ஒட்டுவார். இப்போது எடப்பாடியார் மாற்றிய "தூய்மை பணியாளர்கள்" என்ற பெயருக்கும் ஸ்டிக்கர் ஒட்டிவிட்டார்.

### 9. பேரறிவாளன் அவர்களை விடுதலை செய்ய திமுக எடுத்த நடவடிக்கைகள் என்ன?

J. கிருத்திகா, ஈரோடு

திமுக அமைச்சர் வெற்று பேப்பரை காட்டியது போலத்தான், பேரறிவாளனின் விடுதலையிலும் திமுக அரசின் பங்கு உள்ளது.

### 10. கரூர் மரணத்திற்கு திமுக எப்படி பொறுப்பாகும்?

A. நடராஜன், கோயம்புத்தூர்

கரூரில் 41 உயிர்கள் பறிபோனதற்கு காரணம் முழுக்க முழுக்க திமுக அரசே பொறுப்பேற்க வேண்டும். அரசு உரிய பாதுகாப்பு வழங்கியிருந்தால் கரூர் துயரம் நடந்திருக்காது. நிர்வாக திறமையற்ற திமுக அரசு சரியாக கூட்டத்தை கட்டுப்படுத்த தவறியதன் விளைவாகத்தான் கரூரில் மரண ஓலம் ஒலித்தது.

**நீங்கள் கேட்க விரும்பும் கேள்விகளை**

annavazhidravidam@gmail.com
என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.




நடந்தவை
நடந்தவையாக
இருக்கட்டும்
இனி நடப்பவை
நல்லவையாக
இருக்கட்டும்